★ விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 புரட்டாதி 22 முஹறம் 1 இதழ் 237

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 8 10 83

"வடக்கு கிழக்கில் இடைத்தேர்தல் நடந்தால்

## சுயேட்சை வேட்பாளரைக் கூட்டணி ஆதரிக்கும்"

### சென்னையில் 'சிவா' அறிவிப்பு

(சென்னை)

இலங்கையில்வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடைத்தேர்தல் நடத்தப்பட்டால் சுயேச்சை வேட்பாளர்களை தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரிக்குமென்று அதன் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

ஆளும் ஐக்கியதேசியக்கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெறுவதைத் தடுப்பதற்காகவே சுயேச்சை வேட்பாளர்களை ஆதரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சென்னையில் நிருபர்கள் கூட்டம் ஒன்றில் இதனைத் தெரிவித்த திரு. சிவசிதம்பரம், இம்மாதத்துடன் பதவி இழக்கும் கூட்டணி எம். பி.க்கள் 16 பேரும் மீண்டும் போட்டியிடுவதில்லையென்று தீர்மானித்திருப்பதாகவும் தெரிவித்தார். (கு)

## வவனியாவில் வாகனங்கள் தீவிர சோதனை

(வவனியா)

வவனியாவுக்கு வரும் சகலவாகனங்களும் வவனியா சந்தியில் வைத்து பொலிசாரால்கடுமையாகச் சோதிக்கப்படுகின்றன. குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து வரும் வாகனங்கள் சோதிக்கப்படுகின்றன.

"பலாலி வீதிவழியாக 'ட்ரக்'கில் வந்து கொண்டிருந்த போது

# எம்மை நோக்கிக் குண்டுகள் வீசப்பட்டன;

# தொடர்ந்து துப்பாக்கி வேட்டுகள் விழுந்தன"

## 13 இராணுவவீரர்கள் மரண விசாரணையில் சாட்சியம்

(ஏ.வி.மாணிக்கம்)

"நாங்கள் பதினைந்து இராணுவ வீரர்கள் பலாலி வீதிவழியாக குருநகர் முகாம்நோக்கி சென்றுகொண்டிருந்தபோது எமது ட்ரக் வண்டிமீது குண்டுகள் வீசப்பட்டன. சாரதி வண்டியை நிறுத்தியதும் எல்லோரும் வண்டிக்குள் விழுந்தோம், எழுந்திருக்க முன்னர் சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்கள் வந்தன. இத்திடீர் தாக்குதலில் 13 வீரர்கள் கொல்லப்பட்டனர். நாங்கள் இருவர் தெய்வாதீனமாக காயங்களுடன் உயிர் தப்பினோம்"

இவ்வாறு திருநெல்வேலியில் 13 இராணுவவீரர்கள் கொலை தொடர்பான மரணவிசாரணையில் சாட்சியமளித்த இராணுவ வீரர் ரணசிங்க ஆராச்சி உபாலி பெரேரா (30வயது) கூறினர்.

யாழ்.நீதிமன்றத்தில் நேற்றுக் காலை நடந்த இவ்விசாரணையின்போது காயங்களால் பாதிக்கப்பட்ட நிலையில் உபாலி பெரேரா தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

சம்பவதினம் இரவு 8-30 மணியளவில் நாங்கள் 15 இராணுவ வீரர்கள் யாழ். நகர் பகுதியில் ரோந்துக் கடமைக்காக அனுப்பப்பட்டோம். முதலில் நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலிப் பகுதியில் ரோந்து சுற்றிவிட்டு கடைசியாக பலாலிவீதி வழியாக குருநகர் முகாம் நோக்கி சென்றுகொண்டிருந்தோம். திருநெல்வேலிக்கும் கந்தர்மடம் சந்திக்குமிடையில் சென்றுகொண்டிருந்த

(8ம்பக்கம் பார்க்க)

### கொலை எனத் தீர்ப்பு

துப்பாக்கிச்சூடு, குண்டு வெடிப்புக்கான காயங்களினால் மரணம் ஏற்பட்டதென்று பிரேதபரிரிசோதனை செய்த சட்டவைத்தியஅதிகாரி சமர்ப்பித்த அறிக்கையின்படியும், அளிக்கப்பட்ட சாட்சியங்களின்படியும் 13 இராணுவ வீரர்களும் கொலைசெய்யப்பட்டார்கள் என்று தீர்ப்பு வழங்கிய யாழ் நீதிமன்ற நீதவான் எஸ். நாகராஜா, இக் கொலை சம்பந்தமாகப் பொலிசார் விசாரணைசெய்து நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

கடந்த ஜூலை மாதம் 23ம் திகதி திருநெல்வேலியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் ராணுவவீரர்கள் சென்ற வாகனம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டதாலும் அவர்கள் மீது துப்பாக்கிப்

(8-ம் பக்கம் பார்க்க)

தி. மு. க. வின் ஒரு கோடி கையெழுத்து மனு:

## ஐ. நா. செயலாளரிடம் 13ம் திகதி கையளிக்கப்படும்

சென்னை, அக் 7

இலங்கையில் அண்மையில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இனக்கலவரங்களைக் கண்டித்து தி. மு. க. வினால் திரட்டப்பட்ட ஒரு கோடி மக்களின் கையொப்ப மனு இம்மாதம் 13ம் திகதி ஐ. நா. பொதுச்செயலாளர் திரு. பிரெஸ்டி கியூலரிடம் கையளிக்கப்படவுள்ளது.

இம் மனுவை தி. மு. க. வின் சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் திரு. ரி. கே. ராதாகிருஷ்ணன் கையளிக்கவுள்ளார்.

இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்கள் பற்றி ஐ. நா. பொதுச்செயலாளர் விசாரிக்க

(8ம் பக்கம் பார்க்க)

### பஸ்சேவை இரவு 8 மணிவரை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துசபை யாழ்ப்பாணத்திலிருந்து சகல பகுதிகளுக்குமான பஸ்சேவையை இரவு 8 மணி வரைநீடித்துள்ளது.

முன்னர் இந்த பஸ்சேவை இரவு 6-30 மணிவரை மட்டுமே நடைபெற்றுவந்தது. (வெ)

## மட்டுநகர் சிறைச்சம்பவம்:

### 50 தீவிரவாதிகள் சம்பந்தப்பட்டனரா?

(மட்டக்களப்பு)

அண்மையில் இடம்பெற்ற மட்டக்களப்பு சிறை மீட்பு சம்பவத்தில் சுமார் 50 தீவிரவாதிகள் ஈடுபட்டிருக்கவேண்டும் என்றும் இவர்களில்பெரும்பாலானவர்கள் நன்கு பயிற்சி பெற்ற வடபகுதி தீவிரவாதிகள் என்றும் இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வரும் பொலிசார் இப்போது நம்புகின்றனர்.

இச்சிறை மீட்புச் சம்பவத்தின்போது தப்பிச்சென்றுள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதான கைதிகளில் முக்கியமானவர்கள் எவருமே மீண்டும் கைதுசெய்யப்படவில்லை.

தப்பிச்சென்றவர்களில் 37 பேர் பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களில் முக்கியமான அரசியல் கைதிகள் என்று கருதப்படுகின்றது. இவர்களுடன் சிறையிலிருந்து வெளியேறிய சாதாரண கைதிகளில் 55 பேரையும் பொலிசார் மீண்டும் கண்டுபிடிக்கவில்லை.

துண்டுப்பிரசுரம் வைத்திருந்தது போன்ற சிறுசம்பவங்களுக்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 12பேர் மீண்டும்

[8-ம் பக்கம் பார்க்க]

இடம் பெயர்ந்த ஆசிரியர்கள்

## தற்போது கற்பிக்கும் பாடசாலைகளில் தொடர்ந்து கடமையாற்ற அனுமதி

### கல்வி அமைச்சின் செயலாளர் உறுதி

[யாழ்ப்பாணம்]

"சகல அரசாங்கப் பாடசாலைகளும் எதிர்வரும் வியாழக்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டாலும் இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் தொடர்ந்தும் தங்களுக்குத் தற்காலிகமாக வழங்கப்பட்டிருக்கும் பாடசாலைகளில் கல்விகற்பிக்க அனுமதிக்கப்படுவார்கள். ஆயினும் இந்த அனுமதி எவ்வளவு காலத்திற்கு நீடிக்கப்படுமென்பது குறித்து அடுத்த சில தினங்களில் அறிவிக்கப்படும்."

இவ்வாறு கல்வியமைச்சின் செயலாளர் திரு. ஈ. எல். விஜேமன்ன தன்னைச் சந்தித்த இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தூதுக் குழுவிடம் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்துள்ள ஆசிரியர்களின் குறைகளை அவர்களை நேரில் சென்று சந்தித்துக் கேட்டறிந்து, நிவாரணம் வழங்குமாறு சங்கக் குழு விடுத்த வேண்டுகோளையும் திரு. விஜேமன்ன ஏற்றுக் கொண்டதுடன், இம்மாத

(8-ம் பக்கம் பார்க்க)

SALE OF "SEAWORTH"
With Trawling Items

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான, C-Power எஞ்சின் பொருத்தப்பட்ட, பாவனையில் உள்ள "SEA WORTH" மர வள்ளம், விற்பனைக்கு உண்டு, இதற்கான கேள்விப்பத்திரங்கள், பதிவுத்தபால் மூலம் 23-10-83 பிற்பகல் 4 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக, நிறைவேற்று முகாமையாளர், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

மேற்படி வள்ளத்தை நேரில் பார்க்க விரும்புவோர் காரைநகர் சீ-நோர் இறங்குதுறையில் முன் அறிவித்தலுடன் பார்வையிடலாம்.

9165

### சுவீப் முடிவு

(கொழும்பு)

லேசிய லொத்தர் சபையின் 944வது சீட்டிழுப்பின் முதல் மூன்று முடிவுகள் வருமாறு:

1ம் பரிசு

10 T 0467

2ம் பரிசு

14 Z 0763

3ம் பரிசு

04 Q 0907

## பிரபாகரனைத் தேடி மட்டக்களப்பில் வலைவீச்சு

(மட்டக்களப்பு)

"தமிழ்ஈழ விடுதலைப் புலிகள்" இயக்கத்தின் தலைவர் திரு. பிரபாகரன் மட்டக்களப்பு பகுதியில் நடமாடுவதாகப் பொலிசார் தற்போது கருதுவதை அடுத்து மட்டக்களப்பு பகுதியில் தீவிர தேடுதல் வேட்டை நடைபெறுகிறது.

சிலகுறிப்பிட்ட பகுதிகளில் முப்படைகளும், பொலிசாரும் தேடுதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

பல வருடங்களாகப் பொலிசாரால் தேடப்பட்டுவரும் திரு. பிரபாகரன் வெளிநாடுகளில் தங்கியிருப்பதாகவும் இடையிடையே இலங்கைக்கு வந்து சில முக்கிய குற்றச் சம்பவங்களுக்குத் தலைமைதாங்கி அதனை முடித்துவிட்டு மீண்டும் தலைமறைவாகிவிடுவார் என்று முன்னர் கருதிவந்த பொலிசார், தற்போது அவர் மட்டக்களப்பில் நடமாடுவதாகவும் அவரை விரைவில் மடக்கிப்பிடித்துவிட முடியும் என்றும் கருதுகின்றனர்.

திரு. பிரபாகரன் நடமாடக் கூடும் எனச் சந்தேகிக்கப்படும் பொத்துவிலைச் சேர்ந்த காரைதீவு- வாகரை- மூதூர்- வெருகல் ஆகிய இடங்களிலேயே தேடுதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கச்சேரிக்கு அருகாமையில் பென்ரிகொஸ்ட் ஒழுங்கையில் 1 பரப்பு காணி விற்பனைக் குண்டு. விபரங்களுக்கு, No 2 பென்ரி கொஸ்ட் ஒழுங்கை, கண்டி வீதி யாழ்ப்பாணம். 9142

HONDA CD 125 TWIN மோட்டார் சயிக்கிள் உடன் விற்பனைக்குண்டு. 37 (351), மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 9149

Toyota Corla K. E. 50 SL மொடல் கார் 11ஸ்ரீ 7 ஆயிரம் தொடர் இலக்கம் கொண்டது விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி டில்கா பேணிச்சர் பலஸ் இல; 234,236 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 24186 9162

E. L. F. 250 நீள மொடல் தேக்கு மர(B)பொடி அடிக்கப் பட்டுள்ளது. புதிதாக இறக்கு மதி செய்யப்பட்டது. விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி டில்கா பேணிச்சர் பலஸ் இல: 234,236 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24186 9163

''வொக்ஸ் வேகன்'' வான் 33 ஸ்ரீ - வரிசை இலக்கமுடையது. பாவனைக்குகந்த உன்னத நிலையில் உடனடியாக விற்பனைக்குண்டு. கிழமை நாட்களில் நேரடித் தொடர்பு கொள்ளவும். நியூற்ரோன் எலெக்ரிக்கல்ஸ் 141, 143, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 9167

தரமான கழிவுகளற்ற பாரை மீனும் 500 கிராம் (ஒரு ருத்தல்) ரூபா 22/- மட்டும் யாழ். சைனீஸ் றெஸ்ரறேன்ற் 124, R. R. நல்லையா றோட், (முதலாம் குறுக்குத் தெரு) யாழ்ப்பாணம். 9042

லண்டனில்இருந்துகொண்டு வரப்பட்ட வீட்டு தளபாடங்கள் குளிர்சாதனப்பெட்டி (Italy) Eloctrolux Freezer, Microwave Oven, Sharp Threeinone, Kenwood Gourmet, தெலிபோன் பதிவு இயந்திரம், Cordless Telephone, JVC HIFI Units, Leyland Redline Van (Disel) 12 Sri Lancer Station Wagon with A. C. மற்றும் பல வீட்டுக்குத் தேவையான மின்சார உபகரணங்கள் உண்டு. விபரங்களுக்கு 6, நல்லூர் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். 9137

## சேவை

22 வருட அனுபவமுள்ள கணக்காளரினால் உங்கள் வருமானவரிக்கணக்குகளும் மற்ற எல்லாவித கணக்குகளுட் (In English and Tamil) எழுதிக் கொடுக்கப்படும். கடித மூலம் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல; 9082, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9082

## பயிற்சி

Radio and Electronic Engineering (Trade Course) காலை வகுப்புகள் கிழமை நாட்களில் ஆரம்பம் 10-10-83. முன்கூட்டியே பதிவுசெய்ய வேண்டும். உடன் தொடர்பு கொள்க: நிர்வாகி, பொறியியல் கல்வி நிலையம், 22, ராமையா செட்டியார் லேன், யாழ்ப்பாணம். 9108

## தேவை

சீர்மைக்கிளுவைக்கதியால் (கிளிறிசீடியா) உடன் நடுகைக் குரியதாக ஆயிரம்-1000தோல் முதிர்ந்த கதியால்கள் தேவை. குறைந்த நீளம் 7½அடி. அடிக் கதியால் 4¼'' அங்குலம், நுனி 3'' அங்குல சுற்றளவுள்ள நெளிவற்ற கதியால்களாயிருத்தல் வேண்டும், மொத்தபெறுமதி; கிடைக்குமிடம் மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும், விளம்பர இல :9127 C/o ஈழநாடுலிமிட். யாழ்ப்பாணம், 9127

அப்பளம் உற்பத்தி செய்வதில் அனுபவமுள்ள ஆண்கள் தேவை. சான்றிதழ்களுடன் நேரில் தொடர்புகொள்ளவும். சம்பளம் நேரில் பேசலாம். ஐங்கரன் ஸ்ரோர்ஸ் புகையிரத நிலையவீதி, கிளிநொச்சி. 9140

கிளிநொச்சி நகரினுள் பிரதானவீதிக்கு அருகாமையில் இரண்டு ஏக்கர் காணி விலைக்குத்தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 9164 C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 9164

நன்முக பராமரிக்கப்பட்ட குளிர்சாதனப் பெட்டிதேவை. விலைவிபரத்துடன் எழுதவும். A விஜயராஜ், 27/1 மூன்றாம் குறுக்குத்தெரு, பாஷையூர். யாழ்ப்பாணம். 9122

Technical Directors ஆக வேலை பார்க்கத் தகுதிவாய்ந்தவர்கள் பின்வரும் தொழிற்சாலைகளுக்குத்தேவை. பின்ஸ்-கிளிப்ஸ், எலெக்ரோ பிளேட்டிங் Anadising மின்விசிறி, மின் விளக்குகள், சம்பளம் ரூ. 3000/-, Business Consultants and Promoters. Ltd, 222 (76) ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 9155

## கல்வி

உள், வெளிநாடுகளில் (Electric) வேலைபெற - மின்சார தொழில் கல்வி - துரித தனிப்போதனை - பேசும் ஆங்கிலத்துடன்- Jaffna Technical School - (1956ல் ஆரம்பமானது) 53 டேவிட் வீதி - குருநகர், யாழ்ப்பாணம். 9141

G. C. E. (O/L) கணிதம், விஞ்ஞானம் தனிப்பட்ட வகுப்புகள் நடாத்தப்படும். வீ. முருகையா 10/1, சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி. 9135

G. C. E. (O/L), G. C. E. (A/L) கலை, விஞ்ஞானம், வர்த்தகம். Typing, Short hand, G. S. Q. (Bio), B.Sc. (Bio) 17-10-1983 ஆரம்பமாகின்றது வசதிகுறைந்தவர்களுக்குச் சில சலுகைகள் கொடுக்கப்படும். இக்கல்லூரி கல்வித் திணைக்களத்தால் விஞ்ஞான ஆய்வுகூடம் உட்பட அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட பாடசாலையாகும். விபரத்துக்கு:- அதிபர், உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 9132

## பயிற்சி

வெளிநாடு செல்பவர்களுக்காக துரித மோட்டார் மெக்கானிஸம் - எலக்றிக்கல் வயறிங் - வெல்டிங் - பயிற்சிகள் 10-10-1983 ஆரம்பமாகின்றன. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11B மொம்சாக்கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9153

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof: K. நடராஜா ஜே. பி.யை 'லிங்ககிரி' அளவெட்டி (தபாற்கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 9086

## வாடகைக்கு

கே. கே. எஸ். வீதியில் C S K மில்லுக்கு எதிரில் தண்ணீர், வசதியுடன் கூடிய கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். வி. அரியரத்தினம், 'மஞ்சுளம்' 3ம் கட்டையடி, கல்வியங்காடு. 9121

## WANTED

A business establishment in Jaffna requires an ideal clerk with English knowledge for EXPORT and IMPORT and connected wharf and customs clearing work. Age immaterial, should be able to handle all connected correspondence in English independently. Apply before 22-10-83 with bio-data and experience to Advertiser No. 9166 C/o Eelanadu, Jaffna. 9166

## பயிற்சி

Computer Programming (Basic-Cobol) Computer மொழிகளில் கூடிய நேர செய்முறைப் பயிற்சியளிக்கப்படும். T. V. வீடியோ டெக் றிப்பியறிங் எலக்றிக்கல் வயறிங், Hotel management வெல்டிங், ஏயர் கொண்டிசனிங் சகல பயிற்சிகளிற்கும் இரண்டுமாத செய்முறைப் பயிற்சியளிக்கப்படும். மற்றும் Spoken English French உம் புதிய பயிற்சியளிக்கப்படும். ஆரம்பம் 14-10-83. விபரங்களிற்கு: The School of Computer Studies 52/1, கனகரத்தினம் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9061

## யாழ்ப்பாணம் அக்கடமி

### க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1984 மீட்டல் வகுப்புகள்

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சேரலாம்.

சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 10 - 10 - 83 - ல் ஆரம்பமாகின்றன.

அதிபர்
தொலைபேசி எண்: 22617
376, பிரதான வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். 9067

## வெற்றிடம் விற்பனையாளர்

கொழும்பில் தலைமையகத்தைக் கொண்ட நிறுவனமொன்றின் கிளிநொச்சி, யாழ்ப்பாணக் கிளைகளுக்கு விற்பனையாளர் தேவை.

**வயது**
25க்குட்பட்டிருக்கவேண்டும்.

**அனுபவம்**
இரு வருடங்கள் இரும்புச் சாமான்கள், கட்டிடப்பொருட்கள் விற்பனையில் அனுபவம் தேவை. தண்ணீர் இறைக்கும் இயந்திரம் பற்றிய இயந்திரவியல் அறிவு விரும்பத்தக்கது.

**தராதரம்**
க. பொ. த. சாதாரணம் வரை கல்வி அறிவு அவசியம்.

விண்ணப்ப முடிவு திகதி: 15—10—83.

விண்ணப்பிக்கவும்:
விளம்பர இல; 9168
மே/பா, ஈழநாடு,
யாழ்ப்பாணம்.
9168

SCIENCE CENTRE
KARAVEDDY
புதிய வகுப்பு
க. பொ. த. (உயர்தர) 84
ஆரம்பம் 10-10-83
★ DAY CLASS ஆரம்பம் 22-10-83
★ விடுதி வசதி உண்டு. (9111)

எஸ். லோன் வியாபாரிகளுக்கு
ஓர் நற்செய்தி
மகாராஜா நிறுவனத்தின் எஸ். லோன் வடமாகாண விநியோக நிலையத்தில்
உங்களுக்குத் தேவையான சகல எஸ். லோன் பைப் வகைகளும், உபகரண வகைகளும் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.
மீற். 13/05 முதல் 52/05 வரை
நியூற்ரோன் எலெக்ரிக்கல்ஸ்
141, 143, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23016
விற்பனைப்பிரதிநிதி,
158, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கலர் புகைப்படங்களை
குறைந்த செலவில்
குறுகிய காலத்தில்
PROCESSING AND PRINTING
செய்து நயமடைய நாடுங்கள்!
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்.
(9172)

## ஓராண்டு அஞ்சலி

பிறர்க்கெனவே உழைத்த
பெருந்தகையைப் பிரிந்தோமே!
தனக்கென வாழ்ந்திடாச்
சான்றோனை இழந்தோமே!!



V. K. V. நாகராஜா

உதயம்: 1946-06-25 உறக்கம்: 1982-10-17

ஓராண்டு தானா ஒழிந்தது?
நீ இல்லா இக்காலம்
ஒரு கோடி யுகங்களன்றோ?
நினது வெறுமையை நிதமும் உணரும்

உற்றமும் சுற்றமும் உனதருமை நண்பர்களும்.

''செல்வபுரி'', பொலிகண்டி. (9156)

# பஞ்சாப்மாநிலத்தில்ஜனதிபதி ஆட்சி!

## தீவிரவாத சீக்கியர்களுக் கெதிராக இந்திய அரசு நடவடிக்கை!

புதுடில்லி, அக். 7

பஞ்சாப் மாநிலத்தில் சட்டசபை ஆட்சி தற்காலிகமாக நிறுத்தப்பட்டு ஜனதிபதி ஆட்சி அமுலுக்கு வந்துள்ளது. நேற்று இரவு முதல் ஜனதிபதி நிர்வாகம் பஞ்சாபில் பிரகடனப் படுத்தப்பட்டது! அண்மைக்காலங்களில் பஞ்சாப்பில் மிகத்தீவிரமாக இயங்கிவரும் தீவிரவாத சீக்கியர்களின் நடவடிக்கைகளை அடக்கும் விதத்திலேயே அம்மாநிலத்தை ஜனதிபதி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர மத்திய அரசு முடிவுசெய்துள்ளளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய ஜனதிபதி பஞ்சாப் மாநிலத்தில் ஜனதிபதி ஆட்சியை பிரகடனப்படுத்தி வெளியிட்டுள்ள அறிக்கையில், பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மாநிலத்தின் சட்டசபை, ஆட்சிக்குசவாலாகதீவிரவாத சீக்கியர்களின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இதுபற்றி பஞ்சாப் மாநில ஆளுநர் மத்திய அரசுக்கு அறிக்கை யொன்றை சமர்ப்பித்துள்ளார். அந்த அறிக்கையின் அடிப்படையிலேயே பஞ்சாப் மாநிலத்தில் இந்திய அரசியல் அமைப்பின் 356 ஷரத்துக்கமைய ஜனதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.'

ஜனதிபதி ஆட்சியின் கீழ் பஞ்சாப் மாநிலம் கொண்டுவரப்பட்டுள்ளதை அடுத்து அங்கு பொலிசாருக்கும், ஆயுதப் படைகளுக்கும் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. குற்றவாளிகள் என சந்தேகிக்கப்படுவோரை, பிடிஆணை எதுவுமின்றிக் கைது செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் சட்டவிரோதமான ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள் ஆகியவற்றைத்தடைசெய்யும் அதிகாரங்களும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

### கட்சித் தலைவர்கள் பாராட்டு

பஞ்சாபில் ஜனதிபதி ஆட்சி பிரகடனப்பட்டுள்ளதை பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் திரு. அடல்பிஹாரி வாஜ்பாய் அகாலிதள் கட்சிதலைவர் திரு. ஹர்சன்சிங் லோங்கோவால் ஆகியோர் வரவேற்றுள்ளனர்.

திரு. வாஜ்பாய் இதுபற்றி தெரிவிக்கையில் ''பஞ்சாபில் ஜனதிபதி நிர்வாகம் தாமதமாகவே பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது ஆயினும் தற்போது இந்நிர்வாகம் பிரகடனப் படுத்தப்பட்டது ஒரு சிறந்த ஏற்பாடு'' என்று தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் சுமார் ஒரு கோடியே இருபதுலட்சம் சீக்கிய மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இம்மாநிலத்திலுள்ள தீவிரவாத சீக்கியர்கள் தமக்கு கூடுதல் அதிகாரங்கள் தரப்படவேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்திவருகின்றனர். (கி)

## வாணவேடிக்கை: 40 மாணவர்கள் காயம்!

சந்தியாகோ, அக். 7

வாணவேடிக்கையொன்றினால் 40பாடசாலை சிறுவர்கள் காயமடைந்தனர் இத்துயர சம்பவம் சிலிநாட்டில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம் பெற்றது.

பாடசாலை மாணவர்களின் தேசிய விளையாட்டுப்போட்டிகள் சிலிதலைநகரான சந்தியாகோவில் ஆரம்பமானபோதே இந்த வாணவெடி விபத்து ஏற்பட்டது.

விளையாட்டுப் போட்டிகளை முன்னிட்டு நடத்தப்பட்ட வானவேடிக்கை விளையாட்டரங்கின் கூரைமீது விழுந்து தீப்பற்றியது. இதனாலேயே அவ்வரங்கிலிருந்த மாணவர்கள் படுகாயமடைந்தனர். 4 மாணவர்கள் மிகவும் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையிலுள்ளனர். (கி)

## ''அணுஆயுதப் போர் அச்சுறுத்தல் நீக்கப்படவேண்டும்''

மாஸ்கோ, அக். 7

''சமாதானத்தைப் பாதுகாத்து வளம்படுத்தவும், அணு ஆயுதப்போட்டியைத் தடுத்து நிறுத்தவும் சோவியத்யூனியன் உறுதிபூண்டுள்ளது. அமெரிக்க செனட்டர்களுடன் சோவியத் ஜனதிபதி யூரி அந்திரபோவ் நடத்திய பேச்சுக்கள் அப்போது சோவியத் அயல் துறைக் கொள்கையின் முக்கியமான புதிய பிரேரணைகளை அவர்கள் வெளியிட்டதுஇவை குறித்து உலகமக்கள் இவ்வாறு தான் மதிப்பிடுகின்றனர்'' என்று ''பிராவ்தா'' எழுதியுள்ளது.

''ஐ. நா. பொதுச்செயலாருக்குச் சோவியத் அயல்துறை அமைச்சர் ஆந்திரி குரோமிகோ அனுப்பியுள்ள கடிதம், விண்வெளியிலும், விண்வெளியிலிருந்து பூமியின்மீதும் வன்முறையைப் பயன்படுத்துவதைத் தடைசெய்யும் நகல் ஒப்பந்தம், இந்த நகல் ஒப்பந்தத்தை ஐ. நா. பொதுச் சபையில் சோவியத் யூனியன் சமர்ப்பித்திருப்பதுபற்றி எல்லாம் அயல்நாட்டுத் தகவல் சாதனங்கள் குறிப்பிட்டு உள்ளன. ''யூரி அந்திரபோவ் வெளியிட்டுள்ள முக்கியமான புதிய பிரேரணைகள் சமாதானத்தையும் மக்களின் பந்தோபஸ்தையும் உத்தரவாதம் செய்யவும், அணு ஆயுதப் போர் அச்சுறுத்தலை அகற்றவும் சோவியத் யூனியன் உறுதியாகப் பணியாற்றுகிறது என்னதைக்காட்டுகின்றன'' என்று ''பிராவ்தா'' கருத்து வெளியிட்டுள்ளது.

## இராணுவ காவலுடன் எண்ணெ வந்தது!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்து ஆலைக்குதேவைப்படும்எண்ணை அனுராதபுரத்திலிருந்துபலத்த இராணுவகாவலுடன் புகைரத மூலம் எடுத்துவரப்பட்டது.

காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் சூளைப்பகுதியில் எரிபொருளாகப் பயன்படுத்தப்படும் இந்த எண்ணையை சிமெந்து தொழிற்சாலையில சேமித்து வைக்கப்பட்டிருந்த போதும் அதுமுடிவுறும்தறுவாயில் இருந்ததையடுத்து இராணுவப்பாதுகாப்புடன் எடுத்துவரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அனுராதபுரத்திலிருந்து 77 ஆயிரம் கலன் எண்ணெ புகையிரதமூலம் இவ்வாறு எடுத்துவரப்பட்டது.

## 70 வயது வரை ஒரு சராசரி பிரிட்டிஷ்பிரஜையின்உணவு

லண்டன், அக். 7

ஒரு சராசரி பிரிட்டிஷ் பிரஜை தமது 70-வது வயது வரை உட்கொண்ட - உணவுப் பண்டங்களின் தொகை கச்சிதமாகக் கணக்கிடப்பட்டுகீழேதரப்பட்டுள்ளது. தினம் உணவுக்காக போராடும் 3-ம் உலக மக்களுக்கு இந்த விபரம் தலைச்சுற்றைக் கொடுத்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

70 வயது வரை பிரிட்டிஷ் பிரஜைஒருவர்உட்கொண்ட உணவு விபரம்:- 77 பன்றிகளையும், 3 பசுக்களையும், 420 கோழிகளையும் தின்றிருப்பார். இவற்றுடன் 4 மைல்கள் நீளமான சொசேஜஸ் பண்டத்தையும் அவர் புசித்திருப்பார். (பன்றி, பசுக் குடலினல் இப்பண்டம் நீளமாகத் தயாராவது).

இவை மட்டுமல்ல, 3500 துண்டுகள் பாண், 4 தொன்கள் உருளைக்கிழங்கு, 2 தொன்கள் மரக்கறியுடன் 60 குளியல் தொட்டி பாலையும், 93,000 கோப்பைகள் தேநீரையும் அவர் அருந்தியிருப்பாராம். இந்தக்கணிப்பீடுகள் பிரிட்டனில் நடத்தப்பட்ட ஆய்வொன்றில் வெளியாகின. [கி]

## இப்படியும் நேர்முகப் பரீட்சை!

லண்டன், அக். 7

கிளிவ்டன் பெஸ்ரர் என்ற முன்னுள் ஆங்கிலேயகடற்படைலெப்டினன்ட் ஒருவர் தமக்கு மனைவி ஒருவரைத் தேர்ந்தெடுக்கப்பெரும் நேர்முகப் பரீட்சை ஒன்றையே நடத்துகிறுர்.

47 வயதான இந்த நபர் கப்பல்களைச்சொந்தமாகக்கொண்ட குடும்பமொன்றைச் சேர்ந்த தனவந்தராவார். இதுவரை இவர் 27 இளம் பெண்களுக்குநேர்முகப் பரீட்சையை நடத்தி விட்டாராம். மொத்தமாக 83 ஆங்கிலேயப் பெண்கள் இவரதுபரீட்சைக்குத் தோற்றியுள்ளனராம்.

தற்போதுஇவர்தமது நேர்முகப் பரீட்சையை இடைநிறுத்தி ஓய்வெடுக்கிறுர்.

தமது அனுபவம் பற்றி அவர் தெரிவித்ததாவது:-

''எனக்கு மனைவி வேண்டுமென்று பத்திரிகையில் விளம்பரம் போட்டிருந்தேன். ஆனுல்இவ்வளவுபெருந்தொகையானவர்கள் என்னைமணக்க முன்வந்ததைக் கண்டதும் திகைத்துவிட்டேன். எனவே இவர்களில் ஒருவரேஎனக்குத்தேவைப்படுவதால், எனக்கு ஏற்றவரைத் தெரிவு செய்யவே நேர்முகப் பரீட்சை நடத்துகிறேன்'' என்றுர். (கி)

## இலக்கியத்துக்கான நோபல் பரிசு

லண்டன், அக். 7

இங்கிலாந்தின் பிரபல நாவலாசிரியர் திரு. வில்லியம் கோல்டிங் என்பவருக்கு 83-ம் ஆண்டுக்கான 'நோபல்' இலக்கியப் பரிசு கிடைத்துள்ளது,

திரு வில்லியம் கோல்டிங்கின் நாவல்கள் நவீன மனித வாழ்வுக் கேற்றனவாக சிறந்த இலக்கியச் சுவையுடன் இருக்கின்றன என்று சுவீடனின் 'நோபல்' பரிசுக்கான தெரிவுக்குழு தெரிவித்துள்ளது. (கி)

## ✯ சூரிய பகவான் திருவுருவம் இந்திய - சோவியத் விண்வெளி பயண சின்னம்!

மாஸ்கோ, அக். 7

தங்கரதத்தில் இரு புரவிகளைச் செலுத்திச் செல்லும் சூரிய பகவானின் திரு உருவம் இந்திய-சோவியத் விண்வெளிப் பயணத்தின் சின்னமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சோவியத் யூனியனில் விண்வெளிப் பயணத்துக்கான பயிற்சிகளைப் பெற்றுவரும் இந்திய வீரர்கள் ஸ்குவார்டன் லீடர் ரகேஷ்சர்மா, ஸ்குவார்டன் லீடர் ரவீஷ் மல்ஷோத்ரா ஆகியோர் விண்வெளிப் பயணத்துக்கான உடையில் சோவியத் பத்திரிகையாளர்களுக்கு நேற்றுப் பேட்டி அளித்தனர். அப்போதே அவர்கள் தமது பயணத்துக்கான மேற்குறிப்பிட்ட சின்னத்தையும் காண்பித்தனர்.

(7-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ ஆட்சிக்கெதிராக பாகிஸ்தானில் 2000 வழக்கறிஞர்கள் ஊர்வலம்!

இஸ்லாமாபாத், அக். 7

பாகிஸ்தானின் லாகூர் நகரில் இரண்டாயிரம் வழக்கறிஞர்கள் இராணுவ ஆட்சிக்கெதிராக பெரும் ஆர்பாட்ட ஊர்வலமொன்றை நேற்று நடத்தினர்.

பாகிஸ்தானில் அண்மைக் காலங்களில் இராணுவ ஆட்சிக்கெதிராக நடத்தப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளில் வழக்கறிஞர்களின் இந்த ஊர்வலமே மிகப் பிரமாண்டமானது என்று தெரிவிக்கப்பட்டது.

இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்ட இரண்டாயிரம் வழக்கறிஞர்களுடன் மாணவர்கள். விவசாயிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர், ஜனநாயக ஆட்சிமீண்டும் கொண்டுவரப்படவேண்டும்' 'இராணுவ ஆட்சி ஒழிக்கப்பட வேண்டும்' என இவர்கள் கோஷமெழுப்பினர்.

இதே வேளை பிரான்ஸில் நோய்வாய்ப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் முன்னுள் பாகிஸ்தான் பிரதமர் ஜனுப் சுல்பிகர் அலி பூட்டோவின் மனைவி நஷ்ரத் பூட்டோ, பாகிஸ்தானின் இராணுவ ஆட்சி உடனடியாக நீக்கப்படவேண்டுமென அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு பாகிஸ்தான் இராணுவ ஆட்சிக்கே பலத்த எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் பாக். இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் ஸியாவுல் ஹக் கிளர்ச்சியாளர்களுடன் தாம் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை என்று கூறியுள்ளார். (கி)

## பிரிட்டிஷ் அமைச்சரின் இரகசிய காதல் அம்பலம்!

லண்டன், அக். 7

பிரிட்டனின் வர்த்தக, கைத்தொழில் அமைச்சரான திரு. சிசில் பார்க்கின்ஸன், தமக்கும் தமது பெண் செயலாளருக்குமிடையே இருந்த அந்தரங்க உறவை வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன் இந்த உறவினுல் இப்பெண் செயலாளர் தாய்மை அடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் பார்க்கின்ஸன் பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி மார்கிரெட் தட்சரின் மிக நெருங்கிய சகா ஆவார். கடந்த ஜூனில் நடந்த பிரிட்டன் பொதுத் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சியின் பெரு வெற்றிக்கு இவரே மூல காரணமாக இருந்தவர்என்றும் தெரிவிக்கப்பட்டது.

செல்வி. சரா கீஸ் என்பவரே இவரின் பெண் செயலாளராவர். திரு.பார்க்கின்ஸன் கடந்த எட்டு வருடங்களாக தாம் இவருடன் அந்தரங்க உறவு வைத்திருந்ததாகவும், தமது உறவின் விளைவாக செல்வி சரா கீஸ் தாய்மையுற்றிருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த அமைச்சர் 52 வயதான செல்வந்தர். ஏற்கனவே மணமானவர். மூன்று பெண்களுக்குத் தந்தையாவார்.

பிரதமர்திருமதி தட்சரின் அலுவலகம் இந்த அமைச்சரின் இராஜினுமாக் குறித்து கேள்விக்கிடமில்லையென்று அறிவித்துள்ளது. ஆயினும் பிரதமர்இந்தவிவகாரத்தை பிரத்தியேகமானதொன்ருகக் கருதுகிருர் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## மணிவாக்கு

சுதந்திர இந்தியாவிற்கு இன்று தேவைப்படுவது மனிதரை உருவாக்கும் ஆசிரியர்களே! சாதாரண பாடசாலை ஆசிரியர்கள் அல்ல: பணத்தையும் அதிகாரத்தையும் நாடாது தம்மை அர்ப்பணிக்கும் பண்புடையவரையே எமது நாடு வரவேற்கின்றது.

— மகாத்மாகாந்தி

# நமது நோக்கு

## நல்லவர் இருவரின் மறைவு: நாட்டின் பேரிழப்பு

இவ்வாரம் இந்நாட்டின் பெருமைக்குழைத்த பெரியார் இருவர் மறைந்த செய்தி இன்றைய நிலைமையில் மக்களின் ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

சமயத்துறையிலும், கல்வித்துறையிலும் அமைதியான ஆனால் பரந்த உலகுக்குப் பயன்படும் தன்மையில் நிறைந்த பணிபுரிந்தவர்கள்: தெற்கில் பௌத்த மதத்துக்குத் தம்மை அர்ப்பணித்த சங்கைக்குரிய நாரத மகாதேரோ அவர்கள்; வடக்கில் கல்விக்கே தம்வாழ்வை தியாகம் செய்தவர் நாட்டின் புகழ் பெற்ற யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னைநாள் முதல்வர் கே. ஏ. செல்லையா அவர்கள்.

நாரததேரோவின் மறைவு இன்று நாடிருக்கும் நிலையில் ஆழமான சிந்தனைகளைக் கிளறும் செய்தியாகும்.

பௌத்தமதத்தின் ஆணிவேர் சங்கமே என்பதை எவரும் அறிவார். பௌத்த மதம் பலநாடுகளிற் பரவியதற்கும், இக்காலத்திலும் பெருஞ்சமயமாக நிலைத்திருப்பதற்கும் சிறந்த காரணம் அதன் சங்கமெனலாம்.

சங்கத்தின் பெரும் புகழ் பெற்ற பிரதிநிதி மறைந்த நாரததேரோ என்ருல் அது மிகையாகாது.

உலகில் பலபாகங்களிலும் புத்த தர்மத்தைப் பரப்பவும் அதனை நிலைநாட்டவும் பல அரிய பெரிய பணிகளை நாரததேரோ செய்திருக்கிறுர். இருப்பினும் அவர் நாட்டிலே நடத்திய போதனைகளும் சாதனைகளும் பௌத்த சமூகத்துக்கு அவர் செய்த அழியாத்தொண்டாகும்.

நீண்ட வாழ்வு வாழ்ந்த இப்பெரியார் நாட்டின் இன்றைய நிலையையிட்டு பெருங்கவலை கொண்டிருப்பாரென்பது வெளிப்படை.

கவலையென்பது இப் பெருஞ் ஞானிக்கு ஒரு துரும்பாயிருந்தபோதும், கருணைக்கு இருப்பிடமான இம்மகான், புத்த தர்மத்தைக் காக்க வேண்டிய இந்நாட்டில் இவ்வளவு கொடுமைகள் இடம்பெற்றதைச் சகித்திருக்க மாட்டார்.

''ஒரு ஜனநாயக நாட்டில் சமயமும் அரசியலும்இணைந்துசெயற்பட்டாலும் சமயத்திற்கு அரசியல் கட்டுப்பட முடியாது'' என்று ஜனதிபதி ஜெயவர்த்தன, கல்குடாவில் நடைபெறும் குழப்பத்துக்கு ஆதரவு அளிக்கும் ஒரு மதகுருவைக் கண்டித்துப் பேசியிருக்கிருர்.

மகான் நாரத தேரோவின் சாந்தமும் தருமமும் பௌத்த சங்கத்தை மாசுபடுத்தும் அங்கத்தவர்களுக்கு இன்று ஒரு சவாலாய் விட்டது.

ஜனதிபதி தொடக்கம் சாதாரண மக்கள் — பல இனத்தவர், மதத்தவர் — இன்று மறைந்த முனிவருக்கு தங்கள் அஞ்சலியைச் செலுத்துவார்கள்.

நாம் இன்று வேண்டுவது; ''நாடு அமைதிபெற, இனக்குரோதம் நீங்க எந்த உயிரையும் கொல்லுவது புத்த தர்மத்தை நிராகரிப்பதென்ற உணர்வு பலம் பெற இம்மகானின் வாழ்க்கை சிங்கள சமூகத்தில் போதிய தாக்கம் ஏற்படுத்தவேண்டுமென்பதே.

வடக்கில் மறைந்த பெரியாரின் பெருமை எமது வாசகர்கள் அறிந்ததே. பழமைவாய்ந்த யாழ்ப்பாணக் கல்லூரியோடு சுமார் 60 வருடம் தொடர்பு கொண்டு, அங்கே கல்வி கற்று, ஆசிரியராய், அதிபராய், அபிவிருத்தி சேவகராய் தன்னலமற்ற சிறந்த சேவை புரிந்து கல்லூரியோடு இரண்டறக்கலந்த பேராசான் கே. ஏ. செல்லையா அவர்களை அறியாதார் உண்மையில் அறியாதாரே.

யாழ்ப்பாணக் கல்லூரியின் புகழும் பெருமையும் உலகெங்கிலும் பரவியுள்ளது.

இந்நாட்டவர் ஒருவர் அதன் அதிபராக முதன்முதலாக நியமிக்கப்பட்ட பெருமை மறைந்த பெருமகன் செல்லையாவுக் குரியது. ஒரு பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் போன்றதே அப்பதவி.

பல்லாயிரக் கணக்கான மாணவர்களை மனிதராக்கும் பண்பு ஒருகலாசாலை முதல்வரின் சிறப்பம்சமானல் அவருடைய ஆளுமை சமூகத்தில் ஒளி பரப்புவது இயற்கையே!

ஆத்மீக உலகிலும், கல்வி உலகிலும் அளப்பரியசேவை புரிந்த இம்மகான்கள் இருவரின் மறைவு இன்றுமக்கள் படும் துன்பங்களுக்கு ஒரு படிப்பினையாக விருக்க வேண்டுமென்பதே எமது பெரு விருப்பம்.

---

### யாழ். பல்கலைக்கழகத்தில் துரித ஆங்கில பயிற்சி வகுப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக [1983-84] புதிய மாணவருக்கான துரித ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் இம்மாதம் 24ம்திகதிமுதல் ஆறு வாரங்களுக்கு நடைபெறும்.

இப்பயிற்சி வகுப்புகளுக்கான ஆங்கிலத் தகுதிகாண் பரீட்சை இம்மாதம் 20ம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

புதிய மாணவர்களைப் பதிவு செய்தல் இம்மாதம் 19ம் திகதி தொடக்கம் 24ம திகதிவரை நடைபெறும்.

இதுபற்றிய விபரங்கள் தபால்மூலம் மாணவர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றிய விபரங்கள் தேவைப்படின் பரீட்சை தேர்வுக் குழு உதவிப் பதிவாளருடன் தொடர்புகொள்ளும்படி, பதிவாளர் கேட்டுள்ளார்.

[மா]

---

## இன்று சர்வதேச லயன்ஸ் கழகங்களின்

# உலக சேவை தினம்

1917-ம் ஆண்டு ஆனி மாதம் 7ம் திகதி சர்வதேச லயன்ஸ் கழகம் உத்தியோக பூர்வமாகஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை தனது சேவையை விஸ்தரித்து சமூகத்தின் ஆதரவினையும் பெற்று இக்கழகம் வளர்ந்து வந்துள்ளது. இன்று உலகில் ஒரு மிகப்பரவலான அங்கத்தவர்களைக்கொண்ட சுறுசுறுப்புடனும், வேகத்துடனும் இயங்கும் ஒரு சமூக சேவை ஸ்தாபனமாக இது மிளிர்கின்றது.

தற்போது ஏறக்குறைய 157 நாடுகளில் 1,358,000 அங்கத்தவர்களையும் 36,210 கழகங்களையும் 643 மாவட்டங்களையும் கொண்டுள்ளதாக விளங்கும் இந்த ஸ்தாபனம் சர்வதேச ரீதியில் சேவையிலும், சமூகஇன ஒற்றுமையிலும், சமாதானத்திலும் ஒரு முக்கிய பங்கினைவகிக்கின்றது.

வேண்டிய உடன் சேவைகள் முதலியனவற்றை துரிதமாகச் செய்த லயன்ஸ் அங்கத்தவர்கள் அதன்பின்னரும் எமது பகுதியின் பல பாகங்களாகிய யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கிளிநொச்சி, மாதகல், பருத்தித்துறை வவனியா போன்ற இடங்களில் நடைபெற்றுவரும் முகாம்களை நடாத்த சகல உதவிகளையும் செய்துவருகின்றனர்.

குறித்த காலகட்டத்தில் ஆளுநர் டாக்டர் பாமிமொகமட் இஸ்மயில் ஆற்றியசேவை அளப்பரியதாகும். இரவு பகல் அயராது அகதிகள் சேவைக்கு தன்னை அர்ப்பணித்தது மட்டுமன்றி வடபிரிவில் வந்த அகதிகள் புனர்வாழ்வுக்கு வீடு கட்ட, தொழில் வசதிகள் ஏற்படுத்த திட்டங்களையும் தயார் செய்துள்ளார். இதுசம்பந்தமாக அண்மையில் இந்தியா சென்று அக்கழகங்களின் உதவி பெறுவது பற்றியும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

---

### க. குணரத்தினம்

(பிரதி மாவட்ட ஆளுநர், சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் — 306 B)

---

நமது நாட்டில் இற்றைக்கு ஏறக்குறைய25வருட காலமாக பரந்து சேவையாற்றிவரும் லயன்ஸ் கழகம் தற்போது 306A, 306Bஎனக் குறிப்பிட்ட இரு மாவட்டங்களைக்கொண்டுள்ளதாக அமைந்துள்ளது. நாட்டின் வடகிழக்குப் பகுதிகளை உள்ளடக்கிய மாவட்டம் 306B ஆகும். 306A தென் பகுதி மாவட்டங்களை உள்ளடக்கியதாகும்.

இலங்கையில் மிக சுறுசுறுப்புடன் விளங்கும் கழகங்களில் வடமாகாணங்களில் காணப்படும் கழகங்கள் குறிப்பிடத்தக்கவை. கழக ரீதியாகவும், வலய ரீதியாகவும், பிரிவு ரீதியாகவும் இவை குறிப்பிடத்தக்க சமூக சேவைகளையாற்றி வருகின்றன. பொதுவாக செவிப்புலன், கட்புலன் இழந்தோர் சேவை, பிரஜைகள் சேவை, கல்விச்சேவை, சுற்றுடல் பாதுகாப்பு, எமது வசதிகள் சேவை, பொழுதுபோக்கு வசதிகள், சுகாதார சேவை, இளைஞர் சேவை முதலியவற்றில் ஈடுபட்டுவரும் இக்கழகங்கள் அண்மைக்காலத்தில் நடந்த இனக்கலவரத்தினுலும் வன்முறைச்சம்பவங்களினுலும் பாதிப்புற்ருேருக்கு மிகச்சிறந்த முறையில் சேவையாற்றி பொதுமக்களின் மனதில் அழியாத செல்வாக்கினையும், மதிப்பினையும் பெற்றுள்ளன.

அகதிகளாக வந்து இறங்கியவர்களுக்கு காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி முகாமில் சகல வசதிகளையும் வழங்கியதோடு மட்டுமன்றி தமது செல்வாக்கினைப் பிரயோகித்து கொழும்பில் இருப்பவர்கள் பற்றிய தகவல்கள், அவர்களை பாதுகாப்பாகக் கொண்டுவர வசதி இறந்தோருக்கு ஆக

இவ்வாறு சேவையாற்றும் இக்கழகங்கள் ஒக்டோபர் மாதம் எட்டாம்திகதியைஉலக லயன்ஸ் சேவைதினமாக பிரகடனப்படுத்தி அத்தினம் எல்லா அங்கத்தவர்களும் ஒருமித்து சேவையில் ஈடுபட்டு சமூகத்தினர் மத்தியில் தமது சேவையை வலுப்பெறச்செய்யும் நடவடிக்கையில் இறங்குவர்.

ஏறக்குறைய 1, 358, 000 லயன்ஸ் அங்கத்தவர்கள் கூட்டாக சேவையிலீடுபட்டால் அதன்பலாபலன்கள் எவ்வாறு அமையுமென்பதை பொதுமக்கள் அவர்கள் ஏற்கனவே செய்த சேவையைக்கொண்டு மட்டிட முடியும். இத்தினத்தில் வயதுமுதிர்ந்தோர், சுகவீனமுற்ருேர், மற்றும் விசேட அன்பும் ஆதரவும் வேண்டி நிற்போர் போன்றவர்களுக்கு உபசரிப்பு. அவர்கள் நலன் பராமரிப்பு, வலது குறைந்தோர் அல்லது அனுதைவிடுதிகளுக்கு விஜயஞ்செய்து அவர்களுடன் நேரம் செலவழித்தல் அல்லது அவர்களை வெளியே அழைத்துச்செல்லல், இரத்ததான இயக்கம், தேவையானவர்களுக்கு உணவு, உடை சேகரித்தல், பொதுக்கட்டிடங்கள், வாசிகசாலைகள் முதலியவற்றை சுத்தப்படுத்தல், பாடசாலைகளில் தேவையான ஒரு முயற்சியில் ஈடுபடல் போன்ற நற்சேவையில் லயன்ஸ் கழகத்தினர் ஈடுபடுவர். இத்தினத்தின் சேவையால் லயன்ஸ் அங்கத்தவர்கள் தாங்கள் கூட்டாக சேவையில் ஈடுபட்டு மகிழ்ச்சியடைவதுடன் சமூகத்தினர் மத்தியிலும் தமது சர்வதேச கழகத்தின் நோக்கம் குறிக்கோள் முதலியவற்றை நிலைபெறச் செய்கின்றனர்.

சேவைசெய்ய முன்னிற்கும் இக்கழகங்களுக்கு உதவியும் ஆதரவும் வழங்குவதோடு அவர்கள் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு பொது மக்களும் ஸ்தாபனங்களும் தமது சேவைச்சுமையை பகிர்ந்துகொள்ள இலங்கை சர்வதேச லயன்ஸ் 306B மாவட்டம் பணிவுடன் வேண்டுகோள் விடுக்கின்றது.

---

### இன்று ஹிந்தி எழுத்தாளர் ''பிரேம்சந்த்'' தினம்

## சமகால நிகழ்வுகளை இலக்கியமாக்கியவர்

உருது மொழியிலும் ஹிந்தி மொழியிலும் இருநூற்றிருபது சிறு கதைகளுக்கு மேல் எழுதியவர், ஏறக்குறைய பன்னிரண்டு நாவல்களைப் படைத்தவர், ஏராளமான கட்டுரைகள் இயற்றியவர், பல மொழிபெயர்ப்புக்களைச்செய்தவர் என்ற பெருமைகளுக்கு உரியவர் பிரேம்சந்த்.

பிரேம்சந்த் தமது சமகாலப் பிரச்னைகளை, போராட்டங்களை, துன்பதுயரங்களை, தோல்விகளை, தோல்விகளின் காரணங்களை அலசி ஆராய்ந்து உன்னதமான பல சிறு கதைகளையும் நாவல்களையும் சிருஷ்டித்துள்ளார். அவர் கற்பனை மாளிகைகளிலும் தந்தக்கோபுரங்களிலும் உலா வரவில்லை. பூரண மனிதாபிமானத்துடன் கதாபாத்திரங்களை அணுகி அவற்றின்மீது பாரமாய் ஏறி நசித்துக்கொண்டிருந்த கொடுமைகளைச் சாடவும் அவர் தவறவில்லை காந்தீயமும் முற்போக்குக் கருத்துக்களும் ஒன்றிணைந்து அதே சமயத்தில் கலா சிருஷ்டிப் பூரணத்துவத்துடன் சிறுகதைகளையும் நாவல்களையும் சிருஷ்டித்த வகையில் இந்திய மொழிகளில் அவரே முன்னேடி.

'பிரேம்சந்த்' என்பது சொந்தப் பெயர் அல்ல. 1881 ஆம் ஆண்டிலே காசிக்கு அண்மை

### 'சொக்கன்'

யிலுள்ள கிராமம் ஒன்றிலே தோன்றித் தமது பதின்மூன்ருவது வயதிலேயே எழுத்துலகில் பிரவேசித்த 'தனபத்ராய் ஸ்ரீவத்சவ' என்பவரின் புனைபெயர்தான் அது. அவர் முதலிலே எழுதத் தொடங்கியது உருது மொழியிலே தான். பின்புதான் ஹிந்தி மொழிக்கு மாற்றிக்கொண்டார். எத்தனை மீளாய்வுகளுக்கும் பரிசோதனைகளுக்கும் உட்படுத்தினுலும் தாக்குப்பிடித்து எப்பொழுதும்வாழப்போகின்றசிருஷ்டிகர்த்தாவே தனபத் ராய் வத்சவ என்ற 'பிரேம்சந்த்' என்பதற்கு ஐயமில்லை.

பிரேம்சந்த் தொழிலால் பாடசாலை ஆசிரியர். ஆசிரியர்க்கே உரிய உபதேசிக்கும் பண்பு அவரின் கதைகள் பலவற்றிலும் காணபபடுவது உண்மைதான். எனினும் ஆசிரியர் கூற்ருக அவை அமையாமல் பாத்திரங்களின் கூற்ருகவோ அவற்றின் சொற்பொழிவுகளாகவோ அமைந்திருப்பதால் இயற்கையாக இருக்கின்றன; சலிப்பை ஏற்படுத்தவில்லை. சிந்தனையைக் கிளறிவிடும் இயல்பு அவற்றில்

(8-ம் பக்கம் பார்க்க)

---

### சரஸ்வதி சிந்தனை

வெண்டா மரைத்தவிசில் மேலிடுந் தெய்வமுயர்
வீணைக் குகந்த தெய்வம்
வேதாவி னுவிலே நர்த்தனஞ் செய்திடும்
மேலான ஞான தெய்வம்
கண்டா லினிக்கின்ற கனியான தெய்வமென்
கருத்திற் குவந்த தெய்வம்
கற்பனைக் கெட்டாத வற்புதக் கோலமாய்க்
கலநதுநின் றருளுந் தெய்வம்
விண்டோயுந் தேவர்க்கும் விளக்காய தெய்வமிறை
விழைவினை விளைக்குந் தெய்வம்
வேருத லில்லாத மிக்கமெய்ஞ் ஞானமாம்
வித்திடும் மோன தெய்வம்
தண்டேன் றமிழ்ப்புலமை பாலிக்குந் தெய்வமருள்
தருகின்ற விமல தெய்வம்
தவஞான மில்லாத தமியேற கிரங்கியருள்
சரஸ்வதித் தெய்வ மாமே.

—ச. தங்கமாமயிலோன்

# 'இலங்கை தமிழர்பிரச்னையை இந்திரா ஏன் ஐ.நா.வுக்கு எடுத்துச் செல்லவில்லை?''

இலங்கைத் தமிழர் பிரச்னையை ஐக்கிய நாடுகள் சபையில் இந்திரா எழுப்புவதற்குத் தயங்குகிறார் என்ற குற்றச்சாட்டை தமிழக அரசியல் கட்சிகள் முன்வைத்து அவரைக் கடுமையாகத் தாக்கினார்கள்!

தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். இவ்விஷயத்தில் மௌனமாக இருந்தாலும், அவர் கட்சியைச் சேர்ந்த சில அமைச்சர்கள், 'இலங்கைத் தமிழர் பிரச்னையை ஐ. நா. வில் இந்தியா எழுப்பவேண்டும்' என்று பகிரங்கக் கூட்டங்களில் வற்புறுத்தினார்கள்! கலைஞரும், அவர் கட்சிக்காரர்களும் இந்த விஷயத்தில் மிகக் கடுமையாக இந்திராவை விமர்சித்தார்கள்.

தமிழ் நாட்டிலுள்ள இந்திரா காங்கிரஸ் காரர்களுக்கு இது மிகவும் தலையிடியை ஏற்படுத்தி விட்டது!

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இதற்குப் பதில் சொன்னது!

ஐ. நா.வுக்குச் சென்ற எந்தப் பிரச்னைக்கு ஒழுங்கான தீர்வு ஏற்பட்டிருக்கிறது? இதற்கு மாறாக, இலங்கைப் பிரச்னை வல்லரசுகளின் பகடையாக மாறிவிடும்! இலங்கைத் தமிழர்களும், இந்திய அரசும் ஐ. நா, சபையின் வாசலில், மடிப்பிச்சை ஏந்தி நிற்கும் பரிதாப நிலைமை ஏற்பட்டுவிடும்; இதைத் தமிழகம் ஏற்குமா?''

**ரத்தத்தால் கையெழுத்துகள்**

இலங்கைத் தமிழர் பிரச்னையில் ஐக்கிய நாடுகள் சபை தலையிடவேண்டுமென்று கோரி தமிழகத்திலுள்ள இரண்டு கோடி மக்கள் கையெழுத்துடன் மகஜர் அனுப்பிவைக்கப்பட்டது அல்லவா! கலைஞர் கருணாநிதியின் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தக் கையெழுத்துக்களை இலங்கைத் தமிழர்களுக்காகப் பெற்றது,

## தமிழகத்தின் இதயக் குமுறல் - 12

பார்சல்களாக விமானத்தில் ஐ. நா. சபைக்கு அனுப்பிவைக்கப்பட்ட பெரும் பணச் செலவில் அனுப்பிவைக்கப்பட்டன.

ஐ. நா. சபைக்கு அனுப்பப்பட்ட கையெழுத்துக்கள் கொண்ட மகஜர் குறித்துக் கலைஞர் சொல்கிறார்:

ஐ. நா. சபையில் இலங்கைத் தமிழர் பிரச்னையை உணரக் கூடியவகையில், மகஜர் எழுதப்பட்டுள்ளது. அத்தோடு, சம்பவங்களை நேரில் கண்டவர்களின் அறிக்கைகளையும் இணைத்துள்ளோம். கிராமங்களில் கையெழுத்துப் போட்ட மக்கள் பெரிய பெரிய எழுத்துக்களில் கையெழுத்துப் போட்டார்கள். இப்படி பெரிய எழுத்துக்கள் போடப்பட்டதால், சிலபாரங்களில் அறுபது எழுபது கையெத்துக்கள் தான் இருந்தன, இவற்றில் ஐயாயிரம் கையெழுத்துக்கள் ரத்தத்தால் போடப்பட்டுள்ளன.''

**தீக்குளிப்பு**

இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைப் பொறுக்காது, தமிழகத்தின் இளைஞர்கள் சிலர் தீக்குளிக்கவும் செய்தார்கள்!

கலைஞர் உடன்பிறப்புக்கள் என்றும், எம். ஜி, ஆர். ரத்தத்தின் ரத்தமே என்றும் அழைப்பதில் அர்த்தமில்லாமலில்லை!

**தொகுத்துத் தருபவர்: ஈ. கே. ஆர்.**

சென்னையில் இலங்கைத் தூதரகத்துக்கு முன்னால், ஷாஜகான் என்ற இளைஞர் எண்ணை ஊற்றித் தீமூட்டித் தன்னுயிரைப் போக்க முயன்றார்! இந்தஇளைஞர் தி. மு. க. காரர்!

இவரைத் தொடர்ந்து, ராஜபாளையம் என்ற இடத்தில் சுப்பிரமணியம் என்ற இளைஞன் தன் உடலுக்கு எண்ணை ஊற்றித் தீ மூட்டினார்! வேதனை தாங்காது கதறினார்! மக்கள் தீயை அணைக்கமுயன்றனர்! உருத்தெரியாமல்போன கருகிய உடல்தான் மிஞ்சியது! இவர் எம். ஜி. ஆரின் கட்சியில் ஒரு தீவிரவாதி!

விருத்தாசலம் என்ற இடத்தில் மற்றொரு இளைஞர் தீக்குளித்து மாண்டார்! இதே போன்று சென்னையிலும் ஒரு இளைஞர் தீக்குளித்தார்!

தம் ரத்தங்களுக்காகத் தம்மைப் பலியாக்கிய அந்த இளைஞர்களுக்குக் கையெடுத்துக் கும்பிட்டு, கண்ணீர் அஞ்சலி செலுத்துவதைத் தவிர வேறு என்ன கைமாறு செய்துவிடப் போகிறோம்?

**உண்ணாவிரதப் போராட்டம்**

இலங்கைத் தமிழர்கள் கொலைகளைக் கண்டித்தும், இலங்கைக்கு இந்தியா ராணுவத்தை அனுப்பவேண்டும் என்றும் கோரி உண்ணாவிரதங்களைப் பலர் செய்தனர். கலைஞரின்கட்சி மட்டுமல்ல, எம். ஜி. ஆர். கட்சியும், திராவிடர் கழகம், தமிழ்நாடு ஜனதா போன்ற கட்சிகளும் செய்தன. இவைகள் ஒருநாள் உண்ணாவிரதங்கள்!

இவற்றுக்கு எல்லாம் சிகரம் வைத்தாற்போல, முன்வைத்த கோரிக்கை நிறைவேற்றப் படாவிட்டால் சாகும்வரை உண்ணாவிரதத்தை இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆரம்பித்தார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த இவர்கள் டில்லியில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர். வை. கோபால்சாமி, எஸ். கணேசன் ஆகியவர்களே இவர்கள்!

ஆயினும் கலைஞரின் வேண்டுகோளின்பேரில் உண்ணாவிரதம் இடையில் கைவிடப்பட்டது!

''சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதைக் கழகம் அனுமதிக்காது'' என்று கலைஞர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார்.

**தி. மு. க. முடிவு**

சென்னை பெரியார்திடலில் நடந்த தி. மு. க. பொதுக்குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மிக முக்கியம் வாய்ந்தது கலைஞர் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:-

''இலங்கையில் நடந்த இனநாசக் கோரக்கொலைகளுக்கும்' சொத்துச் சேதத்திற்குப் பிறகும் இனிமற்பட்டதருணங்களிலும் தமிழர்களும், சிங்களவர்களும் ஒருஅரசமைப்பின் கீழ் தங்கள் உயிரையும், உடைமையையும், தனிக்கலாச்சாரத்தையும், மொழியையும், வாழ்க்கை முறையையும் காப்பாற்றிக்கொண்டுவாழமுடியும் என்று இந்தப் பொதுக்குழுவால் கருதமுடியவில்லை. எனவே விடுதலை பெற்ற தனி ஈழம் தான் இதற்கு நிரந்தர பரிகாரம் என்று இந்தப் பொதுக் குழு கருதுகிறது. அதனை அடைய தி மு.க. முழு ஆதரவையும் வழங்கும்.

''இதேநேரத்தில் இந்திரா அம்மையார் இலங்கை அரசைக் கண்டிக்கத் தவறியதையும் நாம் கண்டிக்கிறோம்.

இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக ஒரு விஷயம் சுட்டிக் காட்டப்பட்டது.

''பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும், ஆபிரிக்க விடுதலை இயக்கத்திற்கும், பங்களாதேஷ் விடுதலை இயக்கத்திற்கும் ஆதரவு காட்டியதோடு, அண்மையில் பாகிஸ்தானில் ஷியாவுல்-ஹக் ஆட்சிக்கு எதிராக நடக்கும் கிளர்ச்சிக்கும் ஆதரவு தெரிவித்து பாகிஸ்தான் அரசின் போக்குக்குக் கண்டனம் தெரிவிப்பதில் ஆர்வமும், விரைவும் காட்டிய அம்மையாருக்கு இலங்கைத் தமிழாகள் கொலைசெய்யப்படுவது அநியாயம் என்பது தெரியவில்லையா?''

**சினிமா நடிகர்களும் குதித்தனர்**

இலங்கைத் தமிழர்களின் நிலைக்காக உருகி, அவர்களுக்கு நடத்தப்படும் கொடுமைகளைக் கண்டு பதைபதைத்தவர்களில் தமிழக சினிமா நடிகர்களையும் முன்வரிசையில் சேர்த்துக் கொள்ளலாம்!

சென்னைத் தெருக்களில் அவர்கள் ஊர்வலம் நடத்தினார்கள்! கோஷங்கள் போட்டார்கள்!

## ரத்தக் கையெழுத்துக்கள் நியூயோர்க் சென்றன!

## நடிகர்களும் போராட்டத்தில் குதித்தனர்!

நுங்கம்பாக்கத்திலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு இந்த ஊர்வலம் சென்றது. தியாகராய நகரில் உள்ள தென்னிந்திய திரைப்பட நடிகர் சங்க அலுவலகத்திலிருந்து இந்த ஊர்வலம் ஆரம்பமானது!

சிவாஜி, எஸ் எஸ். ஆர், ஜெமினி ஆகியவர்கள் ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கினார்கள்.

மேஜர், கமல், நாகேஷ், ஸ்ரீதேவி, அம்பிகா, சாரதா போன்றவர்களும்,

பாரதிராஜா, பாக்கியராஜ், எஸ் பி முத்துராமன் போன்ற டைரக்டர்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

நடிகர்களுக்கு பின்னால் ஜனக் கூட்டம் நகர்ந்து கொண்டே இருந்தது!

இலங்கைத் தூதரகத்துக்கு முன்னால் ஊர்வலம் நிறுத்தப்பட்டது.

சிவாஜி, எஸ். எஸ். ஆர், ஜெமினி, மேஜர் ஆகிய நால்வரும் மகஜர் ஒன்றை எடுத்துக்கொண்டே தூதரகத்துக்குள் நுழைந்தனர்.

இலங்கையில் தமிழர் படுகொலை செய்யப்படுவது மகஜரில் கண்டிக்கப்பட்டது.

''சிங்களவருக்கு மட்டும் ஆங்கிலேயன் சுதந்திரத்தைக் கொடுக்கவில்லை! தமிழனுக்கும் சேர்த்துத்தான் சுதந்திரத்தைக் கொடுத்தான். இப்போது ஏன் தமிழருக்குச் சுதந்திரம் மறுக்கப்படுகிறது?'' என்றும் மகஜரில் கேட்கப்பட்டிருந்தது.

உள்ளே நுழைந்த நான்கு நடிகர்கள் தலைவர்களும் அரைமணிநேரத்துக்குப் பிறகு வெளியே வந்தனர்.

அவர்கள் வரும்வரை, ஒரே கோஷங்கள்!

சிலநடிகர்கள் ஒன்று சேர்ந்து ஒருநாள் உண்ணாவிரதமும் இருந்தார்கள்! சென்னை கடற்

[8ம் பக்கம் பார்க்க]

Computer Programming Course in BASIC, COBOL, RPG. II

எங்களது நவீன வசதிகளுடனான குளிரூட்டப்பட்ட கொம்பியூட்டர் அறையில் முழுமையான பயிற்சி

Commodore Computer களின் ஏக விநியோகஸ்தர்களான DMS Electronics Ltd. Colombo வின் ஆதரவில் உளச்சார்புப் பரீட்சையில் சித்தியெய்தும் 25 மாணவர்களுக்கு இலவசக் கல்வி மீண்டும் அளிக்கப்படவுள்ளது.

உளச்சார்புப் பரீட்சை: 13-10-1983
விண்ணப்பக் கட்டணம்: ரூபா 10/-

விண்ணப்பப்பத்திரங்களை நேரில் வந்து பதிவு செய்து பெற்றுக் கொள்ளவேண்டும்.

குறிப்பு: உத்தியோகம் பார்ப்பவர்களுக்கேற்ற வார இறுதி வகுப்புகளும் உண்டு.

CANTABIA INSTITUTE
21, Main Street,
JAFFNA.
T'phone: 24201




''காலம் பெறுமதியானது''
வீணே கழியும் ஒரு நிமிடத்தையேனும் மீட்டு உபயோகிக்க முடியாது. எனினும் இதையறிந்த பின்னும் எவ்வளவு நேரத்தை வீணாக்குகின்றோம்.
— மகாத்மாகாந்தி

நெடிப் பொழுதில் உங்கள் ஆடைகளின் அழுக்கை அகற்றி பளிச்சிடும் வெண்மையைப் பெறுவதற்குப் பாவியுங்கள்

''சுப்ப மில்க்வைற் சோப்''

விலை ரூபா 6/-

10 மேலுறைகளை அனுப்பி துர்க்கா, இலட்சுமி, சரஸ்வதி வர்ணப்படம் ஒன்றையும், சகலகலாவல்லி மாலையையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் யாழ்ப்பாணம்.

## பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த அரச

# ஊழியருக்கு கொழும்பில் தற்காலிக இருப்பிட வசதி!

### யாழ். திட்டமிடல் பணிமனை அறிவிப்பு

(கொழும்பு)

இனக்கலவரங்களால் இடம்பெயர்ந்து தமது சொந்த இடங்களுக்கு வந்த அரசாங்க ஊழியர்களுக்கு கொழும்பில் தற்காலிக இருப்பிட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கொள்ளுப்பிட்டி 676 'ஷாருஸ்' நிறுவனத்தில் 120 பேரும், பொறளையில் உள்ள கிராம அபிவிருத்தி நிறுவனத்தில் 30 பேரும் தங்குவதற்கு இடவசதிசெய்யப்பட்டுள்ளது.

இந்த இடங்களில் தங்க விரும்புபவர்கள் கொழும்பு 1ல் உள்ள அத்தியாவசிய சேவைகள் நாயகத்தின் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். திட்டமிடல் பணிமனை அறிவித்துள்ளது

## சவர்க்காரத்தில் கொள்ளை லாபம் ரூ. 800 அபராதம்

யாழ்ப்பாணம்)

சவர்க்காரம் ஒன்றின்விலை 4 ரூபா 95 சதமாக குறிப்பிடப்பட்டிருக்க 5 ரூபா 45 சதத்துக்குவிற்ற யாழ்ப்பாணக் கடைக்காரர் ஒருவருக்கு யாழ் மஜிஸ்திரேட் நீதிமன்ற நீதவான் திரு. நாகராசா 800ரூபா அபராதம்விதித்தார்,

யாழ். ரயில் நிலையப் பகுதியிலுள்ள கடைஒன்றில் விலைக் கட்டுப்பாட்டு பரிசோதகர்களின் திடீர் வேட்டையின் போது இந்தக் கடைக்காரர் அகப்பட்டார்!

## 'பெர்மிட்'இன்றி தேவையான சிமெந்து பெறலாம்!

### காங்கேசன் லங்கா சிமெந்து லிமிட் நடவடிக்கை

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிட்டெட்டின் சிமெந்து ஆலையில் சிமெந்து உற்பத்தி பெருமளவு அதிகரித்துள்ளதால் 'பெர்மிட்' எதுவுமின்றி தேவையான அளவு சிமெந்தை பாவனையாளர்களுக்கு விநியோகம் செய்வதில் மேற்படி லங்காசிமெந்துலிமிட்டெட்விநியோகப்பிரிவு ஈடுபட்டுள்ளது.

காங்கேசன் லங்கா சிமெந்து லிமிட்டெட்டின் சிமெந்து ஆலைக்கு தேவையான மின்சாரம் கிடைக்காமையால் இந்த ஆலையை முழுமையாக இயக்கமுடியாத நிலை இருந்து வந்தது. ஆனால் தற்போது சபுகஸ்கந்தை உரத் தயாரிப்புக் கூட்டுத்தாபன ஜெனரேட்டரிலிருந்து இலங்கை மின்சார சபை மின்சாரத்தைப் பெற்று இந்த ஆலைக்கு விநியோகிப்பதால் இந்த ஆலை முழுமையாக இயங்கஆரம்பித்துள்ளது.

நவீன தொழில் நுட்பமுறைகளின்படி அமைக்கப்பட்ட இந்தஆலைநாளொன்றுக்கு1000 தொன்னுக்குமேல் சிமெந்தை உற்பத்திசெய்யக்கூடியதாக உள்ளதால்சிமெந்து உற்பத்தி பெருமளவு அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக லங்கா சிமெந்து லிமிட்டெட் விநியோகப் பிரிவு பெர்மிட் எதுவுமின்றி தேவையான அளவு சிமெந்தை பாவனையாளர்களுக்குவிநியோகித்துவருகிறது. இவ்வாறு கூடுதலாக சிமெந்து விநியோகிக்கப்படுவதால் சிமெந்துத் தட்டுப்பாடு நீங்கியுள்ளதுடன் கள்ளமார்க்கட் சிமெந்து வியபாரமும் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஆயுத முனையில்

# நகைகள் கொள்ளை!

[மாவிட்டபுரம்]

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவில்பூசகர்வீட்டில் நேற்று முன்தினமிரவு 15000, ரூபா பெறுமதியான நகைகள் இனந்தெரியாத நபர்களால் கொள்ளை யடிக்கப்பட்டுள்ளது.

துவக்கு, வாள், கத்தி, பொல்லு மற்றும் பயங்கரமான ஆயுதங்களுடன் பூசகரின் வீட்டிற்குள் சென்ற எட்டு இனந்தெரியாத நபர்கள் வீட்டில் உள்ளவர்களை மிரட்டி தாலி,தோடு,சங்கிலி, இரண்டு மணிக்கூடுகள் ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாகக் காங்கேசன் துறைப் பொலிஸ் நிலையத்தில் சாம்பசிவக் குருக்கள் சுப்பிரமணிய ஐயர் புகார் செய்துள்ளார். பொலிசார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். [வெ]

"பாடசாலை

## வெற்றியின் ரகசியத்தை உணர்ந்து செயற்பட்டவர்"

(பண்டத்தரிப்பு)

''ஒரு பாடசாலை எப்படி நடாத்தப்பட வேண்டுமென்ற ரகசியத்தை மிக நன்கு புரிந்து செயல்பட்டு, அதில் குறுகிய காலத்திலேயே வெற்றியடைந்த அதிபர் திரு. சுந்தரதாஸ் இவரது கடமையுணர்ச்சியைக் கண்டும்,இவர் வெற்றியைக் கண்டும்பெருமைப்பட்டவர்களில் நானும் ஒருவன்.''

இவ்வாறு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அதிபராக இருந்து வெளிநாடுசெல்லும் திரு. வி. சுந்தரதாஸுக்கு நடத்தப்பட்ட சேவைநலம் பாராட்டு விழாவில் பேசுகையில், பதில் அதிபர் திரு. வி. பொன்னுத்துரை பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழைய மாணவர்கள் சங்கமும் இணைந்து சேவைநலம் பாராட்டுவிழாவொன்றை நடத்தின.

கல்லூரி அபிவிருத்தியிலும், மாணவர்களின் கட்டுப்பாடு, ஒழுக்கம் ஆகியவற்றைப் பேணுவதிலும் அதிக அக்கறையுடன் செயல்பட்டுவந்த அதிபர் திரு. சுந்தரதாஸ் விளையாட்டுத் துறையிலும் கல்லூரியை முன்னணியில் திகழச்செய்தார் என்று அங்கு பாராட்டுரை நிகழ்த்திய பலரும் கூறினர்கள்.

வாழ்த்துப்பாவொன்றும் வாசித்து கையளிக்கப்பட்டது.

கல்லூரி ஆசிரியர் நலன்புரிச் சங்கத்தினர் சார்பில் மதிய போசன விருந்து உபசாரமும் அளிக்கப்பட்டது.

## துப்பாக்கிமுனையில் கொள்ளை: சந்தேக நபர்கள் சரண்!

(மாவிட்டபுரம்)

பெரியவிளான் தங்கச்சங்கிலி கொள்ளை தொடர்பாகத் தேடப்பட்ட மேலும் இரு சந்தேக நபர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் சரண்புகுந்ததையடுத்து றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

பெரியவிளான் முள்ளானைப் பகுதியில் வசிக்கும் சரவணமுத்து பாக்கியம் என்பவரது வீட்டுக்குப் போலித்துப்பாக்கியுடன் சென்ற சில இளைஞர்கள் அத்துப்பாக்கியைக்காட்டி 4500 ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலியை கொள்ளையடித்திருந்தனர். இது தொடர்பாக ஏற்கனவே திருநாவுக்கரசு உத்தமசீலன் என்பவர் கைதாகி மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். தேடப்பட்ட இரு சந்தேக நபர்களான பரணி, ஜெயரோம் என்போர் மல்லாகம் நீதிமன்றத்தில் சரண்புகுந்தனர்.

மல்லாகம் நீதிபதி சீ. வி. விக்னேஸ்வரன் இருவரையும் இம்மாதம் 17-ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.



ராணி (யாழ். நகர்)
10-30 2-30 6-1
[illegible] - அம்பிகா
சகலகலா வல்லவன்

லதா (கோண்டாவில்)
தினசரி 2-30, 6-30
எம். ஜி. ஆர். - ஜெயலிதா
தேடிவந்த
மாப்பிள்ளை

சாந்தி யாழ்நகர்
10-30, 2-30, 6-30
சிவாஜி - மஞ்சுளா
உத்தமன்
(புதிய பிரதி)

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00.
4-30, 7-00
Sean Connery
Jene Hackman in
The Bridge
Too Far
(War Film)
From 12-10-83 to 14-10-83
NORTH SEA HIJACK

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-00, 4-30, 6-45
Bruce Lee in
ENTER THE
DRAGON
Limited Engagement
For the last time in Jaffna
புரூஸ் லீ நடித்த
என்டர் த ட்ரகன்
சில தினங்கள் மட்டும்
யாழ். நகரில் கடைசி
தடவையாகத் திரையிடப்
படுகிறது.
Next :
IT COULD HAPPEN
TO YOU
(A Film on V. D.)

லிடோ (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 6-30,
விடியும்வரை
காத்திரு

வெலிங்டன்
(யாழ். நகர்)
சிவாஜி - சாவித்திரி
கர்ணன்
(கலர்-புதியபிரதி)

றீகல் 6th to 10th
(யாழ். நகர்)
Daily: 10-30 a.m., 2-30,
4-45, 7-00 p.m.
Christopher Walken in
Dogs of War
WAR FILM—COLOR
இராணுவத்தினரால்
சிறைப்பிடிக்கப்பட்டு
சித்திரவதைகளுக்குள்
ளாகி வெளியேற்றப்
படும் அவன் சில நண்
பர்களைச் சேர்த்து,
நவீன ஆயுதங்களையும்
சேகரித்து இராணுவ
முகாமையே நிர்மூல
மாக்குகிறான்.


## இந்திய....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அச்சின்னத்தில் சூரியபகவான் செலுத்திச் செல்லும் தங்கரதத்திலுள்ள இரு குதிரைகளில் ஒன்று சிவப்புநிறமாகவும் மற்றையது கறுப்பு நிறமாகவும் உள்ளது.

இந்திய விண்வெளி வீரர்கள் இருவரும் அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்திலேயே தமது முதலாவது விண்வெளிப் பயணத்தை மேற்கொள்வார்கள். இவர்கள் கடந்த சில வருடங்களாக சோவியத்யூனியனின் விண்வெளி ஆராய்ச்சி நகரமான 'ஸ்டார்சிட்டி'யில் தீவிர பயிற்சிகளை பெற்று வருகின்றனர். (கி)


ராஜா (யாழ்நகர்)
10-30, 2-30, 6-00
[illegible]—அம்பிகா
[illegible]
அந்த 7 நாட்கள்
(கலர்)

[illegible]ரன் (யாழ். நகர்)
காலை 10-30, 2-30, 6-30
சிவாஜி-சரிதா
[illegible]
துணை
(கலர்)

மனோகரா
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம். ஜி. ஆர்., ஜெயலலிதா
தங்கவேலு, நம்பியார்
நம் நாடு (கலர்)


# இன்றைய பலன்

புரட்டாதி 22-ம் திகதி
சனிக்கிழமை
(8-10-83)

மேடம்: குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும் காதலர்களாயின் கற்கண்டான தினம் பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர் களஸ்திர வழியால்நன்மையுண்டு.

இடபம்: பொருமையின் நிழல் உங்களைத் தொடரும் உதவி செய்யப்போய் உபத்திரவத்தை தேடிக்கொள்வீர் அரச பயத்திற்கு இடம் ஏற்படும் ஆகையால் வழக்கு விவகாரங்களில் ஈடுபடாது இருக்கவும்.

மிதுனம்: பிதாவழி மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி ஒன்று கிடைக்கலாம் ஏழைகளிடத்தில் இரக்கம் காட்டுவீர் பிறந்தகத்தின் நினைவு தலைதூக்கும் பெரியவரின் ஆதரவு தவறுமல் கிடைக்கும்.

கடகம்: வாழ்க்கையில் வசதிகள் பெருகும் கற்றதனுல் பயன் இன்று கண்டிப்பாகக் கிடைக்கும் செய்தொழிலில் புதிய உற்சாகம் உருவாகும் மேலதிகாரிகளின் பாராட்டுக்கு இலக்காகுவீர்.

சிங்கம்: பொதுத்துறையில் நாட்டம் பிறக்கும் மக்களின் ஆதரவு கிடைக்கும் செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும் புதுமனை கட்டுவதற்கு எண்ணம் பிறக்கும்.

கன்னி: நெஞ்சமும்புண்ணுகி நெடுமூச்சும் வெளிக் கிளம்பும் தொழிலாலே தொல்லைதோன்றும் அடிசறுக்கும் நிகழ்ச்சிகள் இடம் பெறும் ஆணவத்தை அடக்கி அமைதியை நாடவும்.

துலாம்: குமுறும்நெஞ்சுடன் நாளைக் கடத்துவீர்கள் எதிலும் அவசர முடிவைத் தவிர்க்கவும் உடல்நலத்தில் கவனம்செலுத்தவும் பிரயாணத்தைத் தவிர்ப்பது விரும்பத்தக்கது.

விருச்சிகம்: சொற்சிலம்பம் ஆடுவதில் இன்று முன்னணியில் நிற்பீர் சொகுசான வாழ்க்கை கிடைக்கும் பிறருடைய மதிப்புக்கும் இலக்காகுவீர்கள் வரவேற்க வேண்டிய தினம்.

தனு: ஆசாரக் குறைவுக்கும் அவசரப் போக்கிற்கும் இடமுண்டு இன்று அதிகபேச்சைத் தவிர்க்கவும் வீணபொருளினுல் பணம் விரயமாகும் கட்டுப்பாடு அவசியம் தேவை.

மகரம்: வார்த்தை ஜாலம் செய்வதில் வல்லவராவீர் இனிக்கப் பேசி எதையும் சாதித்துக் கொள்வீர் இயந்திரங்களுடன்பழகுபவர்களுக்கு சிறப்பானதினம் வாகன விருத்தியும் உண்டு.

கும்பம்: பொதுவாக வாழ்க்கையில் அபிவிருத்தி காணப்படுகின்றது அமைதியான நடவடிக்கைகள் மற்றவர்களுடைய நட்பைப் பெறும்வீட்டிலும் மதிப்பு உயர்வதற்கு இடமுண்டு.

மீனம்: ஆயுதபீடைக்கும் இடமுண்டு எதிலும் அவதானம் விரும்பத்தக்கது மொட்டைக்கடிதம் ஒன்று சிறிய பரபரப்பை ஏற்படுத்தும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


MARINE VACANCIES
IN SAUDI ARABIA
CATEGORIES

| | |
|---|---|
| TUG MASTER | STOREKEEPERS |
| TUG ENGINEER | MACHINISTS |
| BOATSWAIN | PIPEFITTERS/ PLUMBERS |
| A. B. | SHIP FITTERS |
| OILERS | WELDERS |
| COOKS | BLACKSMITH |
| LAUNCH OPERATORS | CARPENTERS |
| LAUNCH MECHANIC | AIRCON-MECHANIC |
| DECK HAND (General) | ELECTRICIAN |
| DIVERS | RIGGERS |
| MECHANICAL ENGINEER | CLERKS |
| ENGINE MECHANIC | SECRETARY |
| ELECTRONIC TECHNICIAN | LABOURERS |

Apply for immediate registration
with Bio—data and Photo
CONSTRUCTION AND DEVELOPMENT CO , LTD.
(MANPOWXRRPISION) 8=
37, S. De S. Jayasinghe Mawatta, Nugegoda
Labour Licence No. 96. Ref. No. FE/6/FEA/98/4308
(9169)

HONDA
மலிவு விற்பனை
புத்தம் புதிய HONDA C 70
மோட்டார் சைக்கிள்கள்
விலை 12,900/- மட்டுமே
இந்த விசேஷ சலுகை கையிருப்பு முடியும்வரை மட்டும்
கன்ரேபியா லிமிட்டட்,
21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24201

வெளிநாடுகளில் வேலை செய்வதற்கேற்ற
தொழிற்பயிற்சி பெறுவதற்கு
அரிய சந்தர்ப்பம்
கீழ்க்குறிப்பிட்ட பயிற்சி வகுப்புகள்
15-10-83ல் ஆரம்பமாகின்றன.
1. வெல்டிங் (WELDING)
அ. ஒரு மாத முழு நேர வகுப்புகள்
ஆ. 3 மாத வார இறுதி வகுப்புகள்
2. பிளம்பிங் (PLUMBING)
ஒரு மாத முழு நேர வகுப்புகள்
3. மோட்டார் மெக்கானிசம் (MOTOR MECHANISM)
ஆறு மாத வாரஇறுதி வகுப்புகள்
4. மின்சார வேலைகள் (ELECTRICAL WORKS)
அ. வீடு, வர்த்தக நிலையங்களின் மின்சார வயறிங்—ஒரு மாத பகுதி நேர வகுப்புகள்.
ஆ. மின்சார பொறியியல்துறை டிப்ளோமா. (ELECTRICAL ENGINEERING WORKS DIPLOMA)
6 மாதஇடை நேர வகுப்புகள்
5. கம்பியூட்டர் புறெகிறமிங் (COMPUTER PROGRAMMING)
(செய்முறை அறிமுறை உட்பட)6 மாத வகுப்புகள்
6. ஆங்கில வகுப்புகள்
அ. SPOKEN ENGLISH 3 மாத வகுப்புகள்
ஆ. 6 மாத கால வகுப்புகள்
★ மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்களே உண்டு. இவ்ஸ்தாபனத்தில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்பத்திரத்தில் உடன் விண்ணப்பிக்கவும்.
பயிற்சியைத் திருப்தியாக முடிப்பவர்களுக்கு கூடிய வரை வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற வசதி செய்து கொடுக்கப்படும்.
பதிவாளர்,
பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்,
59, சென். பற்றிக்ஸ் றேட், யாழ்ப்பாணம். (9078)

அன்ரனி காமன்ஸ் – கரவெட்டி
பெண்பிள்ளைகள்
தையல் வேலைக்குத் தேவை
யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகியுள்ள
நீர்கொழும்பில் இயங்கிவந்த பெரிய அளவிலான
"றேடிமேட்" தையல் தொழில் நிலையத்திற்கு
போதிய அனுபவம் வாய்ந்த பெண் பிள்ளைகள்
50 பேருக்கு மேல் தேவை.
விஞ்ஞான முறையிலான துணி வெட்டுதலில்
மிகத் திறமை வாய்ந்த பெண் பிள்ளைகளும்
அநேகர் தேவை.
10-10-83 திங்கள் தொடக்கம் 15-10-83 சனிக்கிழமை வரை
தினசரி காலை 9-30 மணி தொடக்கம் பி. ப. 4 மணி வரையும்
கீழ்க்காணும் முகவரிக்கு சான்றுப்பத்திரங்களுடன்
நேரில் வரவும்.
அன்ரனி காமன்ஸ்
"ராஜஸ்தான்",
(தபால் நிலையம் முன்பாக), கொடிகாமம் வீதி,
நெல்லியடி, கரவெட்டி
(9114)


உங்கள் மங்கள வைபவங்களை
வீடியோவில் படம் பிடித்துக் கொள்ள
உத்தரவாதத்துடன் ரீ.வி ஏரியல்
அமைத்துக் கொள்ளவும்
வீனஸ்
226/1, ஸ்ரான்லி வீதி,
(ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்) யாழ்ப்பாணம்.
நியூ வீனஸ்
79/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## எம்மை நோக்கி குண்டுகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொழுது எமக்கு முன்னே சென்றுகொண்டிருந்த ஜீப் வண்டி குண்டுவீச்சினுல் பாதிக்கப்பட்டதை நான்கண்டேன். அதேவேளையில் எமது ட்ரக் வண்டிமீதும் குண்டுகள் வீசப்பட்டன. சாரதி கேப்ரல் பெரேரா ட்ரக் வண்டியை சடுதியாக நிறுத்திஞர். இதஞல் எல்லோரும் ட்ரக் வண்டிக்குள் விழுந்தோம். எழுந்திருக்கமுன் எம்மைநோக்கி சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்கள் வந்தன.

### திருப்பிச்சுட்டேன்

''நான் மெதுவாக வண்டியிலிருந்து குதித்து வண்டிக்குக் கீழ் பாதுங்கியிருந்துகொண்டு துப்பாக்கி வேட்டுச் சத்தம் வந்ததிசைநோக்கிச் சுட்டேன். எனது தோட்டாக்கள் தீர்ந்த பின்னர் நான் எழுந்து இருளில் மறைந்து சென்று ட்ரக் வண்டி நின்ற இடத்துக்கு அருகாமையிலுளிள வீட்டுச் சுவர் ஒன்றில் ஏறி வீட்டுக்கூரைமீது ஏறினேன்.

### பக்கத்து வீட்டு கூரையில் ஒழிந்திருந்தேன்

''சத்தம்செய்யாமல் கூரையின் பின்பக்கத்துக்கு சென்று படுத்துவிட்டேன். சுமார் அரைமணிநேரம் கழித்து சத்தம் நின்றவுடன் கீழ் இறங்கி வந்தேன். அந்த வீட்டின் முன் பக்க முற்றத்தில் சார்ஜன்ட் சுமதிபால படுத்திருந்தார். நான் நேரடியாக கோண்டாவில் பஸ் டிப்போவுக்குச் சென்று யாழ். பொலிசாருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு யாழ் இராணுவ முகாமுக்கு இச்சம்பவம்பற்றி சொல்லுமாறு கேட்டுக்கொண்டேன்.

''பத்து நிமிட நேரத்தில் இராணுவ வீரர்கள் அங்கு வந்தார்கள்; என்னையும் அழைத்துக்கொண்டு சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு சென்ருர்கள்.

''அங்கு சார்ஜன்ட் திலகரத்ன மரணவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தார். ஏனைய 12 வீரர்கள் இறந்துவிட்டார்கள். பின்னர் நானும், சார்ஜன்ட் சுமதிபால, சார்ஜன்ட் திலகரத்னவும் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டோம். சார்ஜன்ட் திலகரத்ன சிறிது நேரத்தில் இறந்துவிட்டார்.

''தப்பிய இருவரையும்தவிர ஏனைய 13 வீரர்களினதும் துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் அபகரித்துச் சென்றுவிட்டார்கள்.

35, 40 பேரளவில் எம்மைத் தாக்கியிருக்கலாம் என நம்புகிறேன். வீதி விளக்குகள் அணைந்திருந்தன.

எனக்கு இரு துடைகளிலும் தோள் மூட்டிலும் காயங்கள் ஏற்பட்டன.

### சார்ஜன்ட் சாட்சியம்

சார்ஜன்ட் சுமதிபால சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

''சம்பவதினம் இரவு 8-30க்குமாதகல்முகாமிலிருந்து பலாலி முகாமுக்குச் சென்ருேம். அங்கிருந்து ரோந்து சேவைக்காக திருநெல்வேலி வழியாக சென்றுகொண்டிருந்தோம். ஜீப் முன்செல்ல ட்ரக் பின்ஞல் சென்றுகொண்டிருந்தது. திருநெல்வேலிக்கும் கந்தர்மடத்துக்கும் இடையில் பம்ஸ் வெடிச்சத்தம்கேட்டது. மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்ததால் அப்பகுதி இருளில் மூழ்கிக் கிடந்தது. வெடிச்சத்தம் கேட்டதால் எனது துப்பாக்கியால் 20 தடவை இருபக்கமும் நோக்கி சுட்டேன். எனக்கு வலது கையிலும் இடது விலாப்புறத்திலும் காயங்கள் ஏற்பட்டன.

சுமார் 10 நிமிடங்கள் இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிகளால் சுட்டார்கள். நான் வாகனத்தின் கீழ் உருண்டு சென்றேன். பின்னர் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அருகாமையிலுள்ள வீட்டின் மதிலுக்கு மேலால் பாய்ந்து சென்றேன். பின்னர் எவரையும் காணவில்லை. 24ம் திகதி காலை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டேன்.


# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி வன்னியசிங்கம்

(மாசிலாமணி)

(சிங்கன் எலெக்றிக்கல் உரிமையாளர்)

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி வன்னியசிங்கம் 7-10-83 ல் காலமாஞர். அன்ஞர் கோணேஸ்வரியின் அன்புக்கணவரும், ஸ்கந்தரூபன், கிருஸ்ண மோகன், கிருஸ்ணரூபன் கிருஸ்ணதாஸ், விக்ஞ ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார். அன்ஞரின் ஈமக்கிரியைகள் இன்று (8-10-83) பகல் 12மணியளவில் கொக்குவில் மயானத்தில் நடைபெறும், உற்ருர் உறவினர், நண்பர்கள் யாவரும் இவ் அறிவித்தலை தயதுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: V· தெய்வேந்திரன்
(சிவம்) 9182

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் கணபதிப்பிள்ளை

தையலம்மையின் அன்புக் கணவரும், இராமசுவாமியின் அன்புத் தமையனும், சொர்ணும்பாள் (கனடா), செல்வநாயகம், சீவநாயகம் (பாராளுமன்றம்) (செல்வராணி (இந்து மகளிர் கல்லூரி), சபாநாயகம் (பாராளுமன்றம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நல்லையா (இளைப்பாறியகல்வி அதிகாரி), மனேன்மணி யாழ். தபால் அலுவலகம்) சரோஜினி (Y.M.C.A. முன்ஞள் ஆசிரியர் ருேயல் கல்லூரி), சற்குணம், நல்லம்மா (கொழும்பு பெரியாஸ்பத்திரி) என்போரின் மாமஞருமாகிய ஆறுமுகம் கணபதிப்பிள்ளை அவர்கள் காலமாஞர். அன்ஞரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக, ''சிவமயம்'', வளாக ஒழுங்கை, திருநெல்வேலி இல்லத்திலிருந்து இன்று மாலை 4-00 மணிக்கு கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

9181


## கொலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரயோகம் செய்ததாலும் 13 இராணுவ வீரர்கள் மரணமாஞர்கள். இருவர் காயமடைந்தார்கள்

மரணமான 13 இராணுவ வீரர்களின் மரணவிசாரணை நேற்று யாழ் நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் நடைபெற்றது.

நீதிமன்றத்தைச் சுற்றிவர இராணுவ வீரர்கள் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர்.

சம்பவதினம் பலாலி இராணுவமுகாம் பொறுப்பதிகாரியாக இருந்த மேஜர் வீரசேன ரன்பண்டா ரத்ஞயக்காவும் (38 வயது) (இப்பொழுது மாங்குளம் இராணுவமுகாம் பொறுப்பதிகாரியாக இருக்கிருர்). சம்பவத்தில் காயமடைந்து தப்பித்துக்கொண்ட இராணுவ வீரர்களான ரணசிங்க ஆராச்சி உபாலி பெரேரா (30 வயது), சார்ஜன்ட் ஹேவாகே சுமதிபால 41 வயது) ஆகிய மூவரும் நீதிமன்றத்தில் சமுகமளித்திருந்தனர்.

இராணுவ வீரர் உபாலி பெரேரா. காயமடைந்து பாதிக்கப்பட்டநிலையில்காணப்பட்டர்.

இராணுவத்தினரின் சாட்சியங்களை யாழ் உதவிப் பொலிஸ் அதிபர் ரி. மனேகரன் ஆங்கிலத்தில் நெறிப்படுத்திஞர்.

## யாருடையது?

பல திறபபுக் கோர்வைகளைக் கொண்ட கைப்பை, திருநெல்வேலி சிவன் கோவிலடியில் திருநெல்வேலியைச் சேர்ந்த எஸ். கணேசலிங்கம் என்பவரால் நேற்றுக் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

## இலங்கை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கரை உழைப்பாளர் சிலைக்கு அருகே, பன்னிரண்டு மணி நேரம் நடந்தது இந்த உண்ணுவிரதம்!

ரஜனியைப் போல ஒரு நடிகர் இருக்கிருரல்லவா! அவர் தான் விஜயகாந்த். அவர் தலைமையில்தான்இந்தஉண்ணுவிரதம் நடந்தது. சந்திரசேகர், சி. எல் ஆனந்தன், கராத்தேமணி, எம். ஆர். ஆர். ரகு, மனேராமா மகன் பூபதி, நளினி, எம். ஆர். ராதா ரவி, டைரக்டர் வி. சி. குகநாதன் ஆகியோர் இந்த உண்ணுவிரதத்தில் கலந்துகொண்டனர். பலர் கறுப்புச் சட்டை அணிந்திருந்தனர்.

இலங்கைத் தமிழர் பிரச்னைகளை நன்கு உணர்ந்து, புரிந்து முழு நேரமும் செயலாற்றி வரும் டாக்டர் இரா. ஜஞர்த்தனமும் இந்த உண்ணுவிரதத்தில் பங்கெடுத்தார். அங்கு வைக்கப்பட்டிருந்த பெரிய ''பானரி''ல் எழுதப்பட்டிருந்த கோஷங்கள்;

இலங்கை ஜஞதிபதியே, தமிழரை அங்கு வாழவிடு!''

உடல் மண்ணுக்கு! உயிர் தமிழனுக்கே]''

கொல்லாதே! கொல்லாதே! தமிழர்களைக் கொல்லாதே!''

எம். ஜி. ஆர். ஆரம்பித்த இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கும் நடிகர்கள் தமது பங்களிப்பைச் செய்ததும் குறிப்பிடத்தக்கது.

(இன்னும் வரும்)

## தி. மு. க.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்றும் இத்தகைய சம்பவங்கள் இனிமேல் இலங்கையில் இடம்பெருதவாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வெ)

# ''தமிழரின் பெருமையை உயர்த்திய அதிபர்''

(யாழ்ப்பாணம்)

''காலஞ்சென்ற செல்லையா தமிழரின் ஆற்றலை உலகுக்கு அறிவித்த சிறந்த தலைவர்''

இவ்வாறு காலஞ்சென்ற முன்ஞள் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கே.ஏ.செல்லையாவின் இறுதி ஆராதனையில் இரங்கலுரை நிகழ்த்திய முன்ஞள் பிஷப் சபாபதி குலேந்திரன் கூறிஞர். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு, வண சிட்னி பங்கரைத் தொடர்ந்து அதிபரான செல்லையா, தாம் வெள்ளையரின் ஆற்றலுக்கும் திறமைக்கும் எந்தவகையிலும் குறைந்தவரல்லர் என்று நிரூபித்துக் காட்டிஞர். அன்ஞர் தெய்வபக்தி நிறைந்தவர். செய்யும் தொழிலே தெய்வம் எனக் கருதி வாழ்ந்தவர் என்ருர்.''

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. இராஜன் கதிர்காமர் பேசுகையில் திரு. செல்லையா எந்தச் சின்ன விஷயத்தையும் திருந்தச் செய்யவேண்டும் என்ற எண்ணப்பாங்குடன் வாழ்ந்தவரென்றும் விளையாட்டுத்துறையிலும் கல்வித்துறையிலும் முழு ஆர்வத்துடன் உழைத்தார் என்றும் கூறிஞர்.

பிஷப் டி. ஜே. அம்பலவாணர் ''உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு அவன் முடிவு சமாதானம்'' என்ற பைபிள் வாசகத்தை, மகுடவாக்கியமாகக் கொண்டு திரு. செல்லையாவின் வாழ்க்கையைப்பற்றி ஓர் அருளுரை வழங்கிஞர்.

அஞ்சலிக் கூட்டம் சோகம் நிறைந்த நிகழ்ச்சியாகக் காணப்பட்டது.

திரு. செல்லையாவின் மரணச் சடங்கிலே கலந்து கொள்ளப் பெருந்திரளான மக்கள் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் இருந்து வந்திருந்தனர். ஒட்லி மண்டபம் மாணவர், பழையமாணவர், பெற்ருர் அனுதாபிகள் ஆயிரக்கணக்கில் நிறைந்திருந்தது.

நாட்டின் பல பாகங்களிலும் இருந்து அனுதாபச் செய்திகள் வந்து குவிந்தன.

யாழ்ப்பாணக் கல்லூரியின் ஒரு சகாப்தம் முடிவுற்றதென்று எல்லோருல் பேசிக் கொண்டனர்.

## சமகால நிகழ்ச்சி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறைந்து விளங்குகின்றது. அவர் பெருந்தொகையான கதைகளை எழுதியது போலவே பெருந்தொகையான பாத்திரங்களையும் தமது கதைகளிலே உலாவவிட்டார். தமது சமகால நிகழ்வுகளில் ஒன்றைக் கூட அவர் கதைக் கருவாகக் கொள்ளத் தவறவில்லை.

பிரேம்சந்துக்குப் பிரயாணம் செய்துகொண்டே இருப்பதில் தணியாத ஆர்வம். இதஞல் அவர் பெற்ற அனுபவங்களும் சந்தித்த கதா பாத்திரங்களும் அநேகம். அவரின் சிறுகதைகளின் தொகுப்பாசிரியரான ராதா கிருஷ்ண என்பவர் பிரேம்சந்த் தமக்கு எழுதிய கடிதம் ஒன்றிலே குறிப்பிடுவதாக எடுத்துக்காட்டியது பின்வருமாறு:- ''இரயில்வே கார்டாக வேலை பார்க்கத்தான் எனக்கு ஆசை அதிகம். அப்போது பல ஊர்களுக்குப் போகலாம்; பலதரப்பட்ட மக்களோடு கலந்து பழகலாம். புதிய புதிய பாத்திரங்களும் குணசித்திரங்களும் கிடைக்கும்.'' எழுத்தாளன் ஒருவனுக்கு இருக்கவேண்டிய முக்கிய குணும்சம் எது என்பது இதஞல் புலஞகின்றது.

இராதா கிருஷ்ண ஹிந்தியில் தொகுத்த இருபத்திரண்டு சிறு கதைகள் 'சௌரி'யின் மொழி பெயர்ப்பாக 1976 இல் நேஷனல் புக் டிரஸ்ட் (இந்தியா) டிஞல் வெளியிடப்பட்டுள்ளன. ஆக்கூர் அனந்தாச்சாரியாரின் மொழிபெயர்ப்பாக 'பிரேம்சந்தின் சிறுகதைகள்' என்ற தலைப்பில் 1967ல் இரண்டாவது பதிப்பு பாரதி பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. முதற்பதிப்பு வெளியான ஆண்டு 1939. பிரேம்சந்த - 'பண்பாட்டின் இரகசியமும் பிற கதைகளும்' என்ற ஆங்கிலமொழிபெயர்ப்பு நூல் ஜய்க்கோ புத்தகாலயத்தினரால் 1959 இல் வெளியாகியுள்ளது. இருபது சிறுகதைகள் கொண்ட இதனை மொழிபெயர்த்தவர் மதன் குப்தா என்பவர். இவற்றுள் 'சௌரி'யின் மொழிபெயர்ப்பே தரம் மிக்கது; நயமானது. பிரேம்சந்தின் நடை, இறுக்கமும் சுருக்கமும் ஆழமும் கொண்டது என மதன் கோபால் குறிப்பிட்டுள்ள 3 அம்சங்களையும் 'சௌரி'யின் மொழி பெயர்ப்பிலே காணக் கூடியதாக இருக்கிறது. இதஞல் மூலத்தையே வாசிப்பது போன்ற பிரமை உண்டாகிறது. என்று சொன்ஞல் அது தவறில்லை.

## மட்டுநகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சரணடைந்திருக்கிருர்கள் அல்லது கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

இதேசமயம் சிறை உடைப்புச்சம்பவம்பற்றிய விசாரணைகளில் ஒன்றுக்கொன்று முரண்பாடான வாக்குமூலங்கள் பதிவாயிருப்பதாகக் கருதப்படுகின்றது.

கைதிகளைக்கடத்திச் சென்றவர்கள் தம்முடன் கொண்டுவந்த பெயர்ப்பட்டியலில் குறிப்பிடப்பட்டவர்களையே அழைத்துச்சென்றுள்ளனர். ஏனையவர்கள் தாமே வெளியேறியுள்ளனர். பட்டியலில் உள்ள மற்றுஞ்சிலரை உடனடியாக விடுவிப்பது சாத்தியமில்லாமல்போயிருக்கலாம்.

சிறையில் இருந்தவர்களை மீட்டுக்கொடுப்பதற்கு ஒரு பிரிவினரும் அவர்களை கடல் மார்க்கமாகவோ வேறுவகையிலோ அழைத்துச்செல்ல இன்னெருபிரிவினரும் செயல்பட்டுள்ளனராம்.

இவர்கள் கடல்மார்க்கமாகவே தப்பிச்சென்றிருக்கவேண்டும் என்று கருதப்பட்டபோதிலும் அவர்களில் சிலர் இன்னமும் இங்கேயே இருக்கிருர்கள் எனத் தாம் மருதுவதாக அவர் கூறிஞர்.

## இடம் பெயர்ந்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இறுதிக்குள் அவர்களைச் சந்தித்து ஆவன செய்வதாகவும் உறுதியளித்தார்.

இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தூதுக் குழுவில் தலைவர் திரு. டி. எஸ். கே. வணசிங்கா, செயலாளர் திரு ரி. மகாசிவம், நிர்வாகச் செயலாளர் திரு. ரி. அருணகிரிராஜா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

தற்காலிக இடமாற்றம் பெற்றிருக்கும் பாடசாலைகளிலேயே இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் தொடர்ந்து டிசம்பர் மாதம் 31ம் திகதிவரை சேவையாற்ற அனுமதிக்கப்படவேண்டும் எனவும், அங்கேயே அவர்கள் தங்கள் சம்பளத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் தூதுக்குழு கல்வி அமைச்சின் செயலாளரிடம் கேட்டுக்கொண்டது.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81. Eelanadu-P. O. Box, 49. Telegram, Eelanadu, Telephone, 22389—24126.